Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

## மக்களுக்கு தீங்கு தரும் குளிர்பானம் கண்டுபிடிப்பு

தென்மராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய குளிர்பானமொன்றை தயாரித்துவந்த உற்பத்தி நிலையம் ஒன்று சுகாதார பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது சாவகச்சேரி நுணாவில் பகுதியில் தனியார் வீடொன்றில் இயங்கி வந்த இவ் உற்பத்தி நிலையம் எவ்விதத்திலும் பதிவு செய்யப்படாது இருந்தது. யாழ்மாவட்ட உணவு சுகாதார அதிகாரியின் அறிவுறுத்தலின் பெயரில் சாவகச்சேரி சுகாதார பரி (12 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 20 03 - 06 - 1994 வெள்ளிக்கிழமை ஓசை 105

## வடக்கில் தேர்தல் லாபம் ஈட்ட

# அரசசார்பற்ற நிறுவனங்களை அரசாங்கம் பயன்படுத்த முயற்சி

[கொழும்பு]

**தமது தேர்தல் லாபம் கருதி அரச சார்பற்ற நிறுவனங்களைப் பயன்படுத்தும் முயற்சிகள் சிலவற்றை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது. இதன் ஒரு கட்டமாக வடபகுதிக்கான ஜனசவிய திட்டத்தை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.**

வடபகுதிக்கான ஜனசவிய திட்டத்தை மேற்கொள்ளுமாறு வடபகுதியில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு ஜனசவிய திட்டத்தின் ஆலோசகர் சரித ரத்வத்தை கடிதம் எழுதியிருப்பதாக தெரிய வருகின்றது

தேர்தலையொட்டி வடபகுதியில் துரிதமாக ஜனசவிய திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதனை அவ் அரச சார்பற்ற நிறுவனம் மூலம் தாம் செய்ய விரும்புவதாக அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிய வருகின்றது.

இது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் பெரிய சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு நாட்டு அரசாங்கம் தனது அரசியல் செல்வாக்கு பெறும் நோக் ( 11ஆம் பக்கம் பார்க்க )

## அரசுக்கெதிராக பத்திரிகைகள் பொய்ப்பிரசாரம் செய்கின்றன

### டி.பி. விஜேதுங்கா ஆதங்கம்

(கொழும்பு)

செய்தித்தாள்கள் பத்திரிகைச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகவும் அரசுக்கெதிராக பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் ஜனாதிபதி திரு டி.பி. விஜேதுங்கா பத்திரிகைகள் மீது குற்றம் சாட்டியுள்ளார்:

பத்திரிகை ஆசிரியர்களையும், உரிமையாளர்களையும் முதன் முதலாக சந்தித்த போதே திரு டி. பி. விஜேதுங்கா இவ்வாறு குற்றம சாட்டியுள்ளார்.

இச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில் செய்தித்தாள்கள் வேண்டுமென்றே கட்டுக்கதைகளையும் நம்ப முடியாத பொய்களையும் வெளியிட்டுவருவதாக கூறினார் உண்மைகள் வேண்டுமென்றே மறைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார் சுமார் இருபது அல்லது முப்பது செய்தித்தாள்கள் அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதாகவும் அவர் கூறினார் தேர்தல் ஆண்டில் செய்தித்தாள்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் (11ஆம் பக்கம் பார்க்க)

### அரசவங்கிகளில் விவசாயிகள்

## பெற்ற கடனை திரும்ப செலுத்தத் தேவையில்லை

(கொழும்பு)

அரசாங்க வங்கிகள் மூலம் கடன் பெற்று இதுவரை மீளச் செலுத்தாத விவசாயிகள் அக்கடனை மீளச் செலுத்தத் தேவையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது'

1971ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க வங்கிகளில் கடன் பெற்ற 75 ஆயிரம் விவசாயிகள் இக்கடன்களை இதுவரை மீளச் செலுத்த வில்லை என அறிவிக்கப்படுகிறது, இவர்கள் தமது கடனை மீளச் செலுத்த முடியாதுள்ளனர் எனவும் இவ்வாறான கடன்களை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

### இரு நேர பாடசாலையை ஆட்சேபித்து

## யாழ். பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

இரு நேரப் பாடசாலையை ஆட்சேபித்து குடாநாட்டின் பல பாடசாலைகளில் நடைபெற்று வரும் பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்து நடாத்தப்பட்டது.

யாழ் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் கடந்த சில நாட்களைப் போன்று மாணவர்கள் எவரும் பாடசாலைக்குச் சமுகமளிக்க வில்லை இப்பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதைவிட நேற்று மேலும் சில பாடசாலைகள் இந்தப் பகிஷ்கரிப்பில் இணைந்து கொண்டன யாழ்: புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ். ஆங்கிலத் திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலை, யாழ் தமிழ் திருக்குடும்பக் கன்னியர் மடப்பாடசாலை ஆகியன உட்பட மேலும் சில பாடசாலைகள் இப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளன.

## விபத்தில் மரணம்

(வடமராட்சி)

கொழும்பில் விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த மனோகரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (யோ)

## எதிரணிகளுடன் இணைவு பேச்சுகளின் பின்பே முடிவு

### சிறிமணி அத்துலத்முதலி தெரிவிப்பு

[கொழும்பு]

''எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியினருடன் இணைந்து போட்டியிடுவதா என்பதை அவர்களுடன் நான் இப்பொழுது மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகளைக் கொண்டே தீர்மானிக்க முடியும்'' இவ்வாறு சிறிமணி அத்துலத்முதலி தெரிவித்தார்-

எதிர்க் கூட்டணியுடன் இணைவது எனத் தீர்மானித்தால் அக் கூட்டணியிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்- நாட்டுக்கு நன்மை தரும் சிறந்த கொள்கைகளை அவர்கள் கொண்டு வரவேண்டுவது அவசியம்-

இவ்வாறான கூட்டணியொன்றின் ஆசனங்கள் பதவிகளை ஒதுக்கீடு செய்வதில் வேட்பாளர்களின் எண்ணிக்கையையிட்டோ அல்லது அரசாங்கத்தில் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதையிட்டோ இணக்கத்திற்கு வர வேண்டியது ஒவ்வொரு கட்சியினதும் நலன்களை பொறுத்த விடயமாகும்- இவற்றையிட்டு மூன் (11ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்

(மனிலா)

மனிலா கிழக்கு டிமோலில் நடைபெற இருந்த தடை செய்யப்பட்ட கூட்டமொன்றில் கலந்துகொள்ளச் சென்ற நான்கு இலங்கையர்களை பிலிப்பைன்ஸ் அரசு நாடு கடத்தியுள்ளது.

இவர்கள் தடையை மீறிச் செல்ல முயன்றதினால் பந்தோபஸ்து தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் மனிலா வந்தடைந்த சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானத்தில் இந்த இலங்கையர்கள் இருந்தார்கள். இக் குழுவின் தலைவர் எனக்கருதும் பிரடி அப்புஹாமி கமகே (வயது 36) பொலிசாரால் விமானத்திற்கு கொண்டுவரப்பட்டார்

''கிழக்கு டிமோ வாழ்க'' என்று கமகே கையைஉயர்த்திக் காட்டி கோஷமிட்டார். மற்றைய மூவரும் தமாகவே விமானத்தில் ஏறின?

## மைலாப்பூர் தொகுதியில் அ. தி. மு. க. வெற்றி

[டில்லி]

மைலாப்பூரில் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக வேட்பாளர் பி' பாலசுப்பிரமணியம் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இத்தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்பட்டு முடிவுகள் வெளியிடப்படாது தேர்தல் ஆணையாளரால் தடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## புதிய இராணுவ முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய இராணுவ முகாமொன்றை அமைத்துள்ளனர்,

சித்தாண்டி நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் இப் புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது,

சித்தாண்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சூழலிலும் அங் (11ஆம் பக்கம் பார்க்க

## கலந்துரையாடல்

யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 05ம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ் மாவட்ட, அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமக் கோட்ட, தென்மராட்சிக் கோட்ட கடற்றொழிலாளர் சங்க நிர்வாக சபை (11ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**அறிவித்தது**

ஞா.தவராணி ஆகிய எனது தங்க அட்டியலும், காதுச் சிமிக்கியும் நாவற்குழிச் சந்தியிலிருந்து கண்டி வீதியால் வரும் நவீல்ட் பாடசாலை செல்லும் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வா. அருந்தவபாலன், கைதடி மேற்கு, கைதடி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்- தகுந்த சன்மானம் வழங்கப்படும்- (8442)

**விற்பனைக்கு**

நூலக பாவனைக்கு உகந்த மேசை, வாங்கு விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். சி. பொன்னையா இல: 32கற்குளம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (8449)

**தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சி**

தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகாரசபையின் ஆதரவுடன் நடாத்தப்படும் தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியில் சில வெற்றிடங்கள் உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வடமராட்சி சுருக்கெழுத்தகம், வதிரி, கரவெட்டி. மாதாந்த ஊக்குவிப்புத் தொகை ரூபா 450/- வழங்கப்படும். (8332)

**சேவல் குஞ்சுகள் விற்பனை**

2 கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8452)

**"உலக சூழல் தினம்" யூன் 5**

உலகசூழல்தினம்வீட்டுக்கொருமரம், நடுவோம்சக்தி" இயற்கைப் பசளை கொண்டு ஊட்டமளிப்போம்: "மார்க்கோசின்" பாவித்து அவற்றைப் பூச்சி, புழுக்களிலிருந்து காப்போம், மரக்கன்று, "சக்தி", "மார்க்கோசின்" ஒருங்கே கிடைக்குமிடம் -"மில்க்வைற்" (சி 9585)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**விஞ்ஞான பீடம்**

பௌதீக விஞ்ஞானக்கற்கை நெறிக்கும் உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கும் 1993 / 94 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்ட எல்லா மாணவர்களும் (அதாவது 1992 ஆகஸ்டில் க. பொ. த (உயர்தர) பரீட்சைக்குத்தோற்றியவர்கள்) 1994 06.06, 1994. 06.07 ஆகிய திகதிகளில் தங்கள் பதிவினை மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். 1994.06.30 இற்குமுன்பு பதிவு செய்து கொள்ளாவிடின் அத்தகையோர் அனுமதியில் அக்கறை இல்லாதவர்களெனக் கருதப்பட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அவர்களுடைய இடங்கள் நிரப்பப்படும்.

1993 / 94 கல்வியாண்டிற்குரிய வகுப்புகள் 1994.06.13 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்

(சி-9578)

---

## உதவி தாதியர் பயிற்சிக்கான தெரிவு - 1994

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். பிரதேசம் தேசிய பயிலுனர் சபையின் அனுசரணையுடன் உதவி தாதியர் பயிற்சியை நடாத்தவுள்ளது க.பொ.த. (சா/த) தேர்வில் கணிதம், தமிழ் சித்தி தேவை. ஒரு வருட மேற்படி பயிற்சியின்போது மாதாந்தம் ஊககுவிப்புப் படி வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 05 06-1994 ஞாயிறு காலை 9-00 மணிக்கு பிரதேச தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

பிரதேச தலைமைச் செயலகம்,
86, பருத்தித்துறை வீதி, -பிரதேச ஆணையாளர்
யாழ்ப்பாணம் (8453)

---

உ

சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கல்யாண

## அறிவித்தல்

## சிவஸ்ரீ இ. சிவராமலிங்கக் குருக்கள் (சிவராஜா) அவர்களுக்கு

(கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் நித்தியகுரு)

60 வயது நிறைவாவதை முன்னிட்டு சஷ்டியப்த பூர்த்தி சாந்தி நிகழும் பவ வருஷம் வைகாசி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை (3-6-94) மு.ப. 9-30 மணிமுதல் 11-00 மணி வரையுள்ள சுபவேளையில் கைதடி வீரகத்திப் பிள்ளையார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(சி-9517)

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1993 / 94 கல்வியாண்டு

1993/94 கல்வியாண்டிற்கு இப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற எல்லா மாணவர்களும் தங்கள் பதிவினை கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

| | |
|---|---|
| விஞ்ஞான பீடம் | — 1994-06 06 - 1994-06-07 |
| கலைப் பீடம் | — 1994-06-13 - 1994-06-14 |
| மருத்துவபீடம் / விவசாய பீடம் | — 1994-06 15 |

தனித்தனி கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப் பட்டுள்ளன.

பதிவாளர்

(சி-9579)

---

## 8-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்:
29-05-1964

❋

தாயக மடியில்:
03-06-1986

**வீரவேங்கை ஸ்ரீபன் / தீபன்**
(திருநாவுக்கரசு பிரதீபன்)

அன்பின் ஒளியே அணையா தீபமே
நீர் எம்மைவிட்டு பிரிந்தாலும்
உம் நினைவு எம்மைவிட்டு
நீங்காது உம்மனதில் நீர்
கொண்ட சபதம் நிறைவேற இறைவனை வேண்டு
-கிறோம்,

இல. 21, பிரதீபன் வீதி,
(றக்கா லேன்)
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்
(சி-9580)

---

## அறிவுக் களஞ்சியம் இதழ் 23 - விற்பனையாகிறது!

[8454]

---

## நினைவு கூருகின்றோம்... 03.06.1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

❋ **சி இராசலிங்கம்** (ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

❋ **க. கதிர்காமத்தம்பி** (ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

திருமலை மூதூர் பகுதியிலுள்ள ஈச்சிலம்பத்தைக் கிராமத்தை தீயிடவந்த சிங்களக் காடையர்களினால் வெட்டிக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த,

❋ **சேரலன்** (பெரியதம்பி தம்பிராசா ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

❋ **கைலாசபிள்ளை மகேஸ்வரன்** (ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

1986-ம் ஆண்டு யாழ்-அச்செழுவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**ஸ்ரீபன்-தீபன்** (திருநாவுக்கரசு பிரதீபன்-பிரதீபன் வீதி, சுண்டுக்குளி-யாழ்)

1987-ம் ஆண்டு-யாழ்-தொலைத்தொடர்பு நிலையத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**2 ம் லெப் அசோக்** (சோலையப்பதேவர் நாகராசா-ஆண்டான்குளம்-மன்னார்)

**கப்டன் நிக்சன்** (கனகசபை முருகதாஸ் - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை-யாழ்)

**ரதன்** (உருத்திரா டினேந்திரா-கந்தர்மடம்-யாழ்)

1988 ம் ஆண்டு மட்டு-கருவேப்பங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சுபாஸ்** (நடராசா தேவதாஸ்-இருதயபுரம் மேற்கு-மட்டு)

முல்லைத்தீவு-கருவேலன்கண்டல், ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ராகவன்** (நாகமணி வரதராசா-தண்ணீரூற்று-முள்ளியவளை)

1989-ம் ஆண்டு மணலாறு-அளம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் அற்றி** கந்தசாமி கருணாகரன்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

இதே ஆண்டு தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்.

**இராசதுரை ரொபின்சன்** (டேவிற்வீதி-யாழ்)

1991 ம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.திலக்** (பாலிப்போடி சோமசுந்தரம்-கோயில் போரதீவு-மட்டு)

**2-ம் லெப்.வில்லவன்** (பூபாலபிள்ளை சதானந்தன்-அம்பிளாந்துறை-மட்டு)

கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சூரன்** (மு வல்லிபுரம் யூட் கௌசிதரன்-91, கிறீன் வீதி திருமலை)

மட்டு-கல்லடிப் பகுதியில் தேசவிரோதசக்திகள் கைது செய்ய முயன்றபோது, சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சிவா** (சோமசுந்தரம் சிவகுமார் (நொச்சிமுனை-மட்டு)

1992 ம் ஆண்டு 29-05-92 அன்று வவுனியா-மாமடு இராணுவக்காவலரண் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**லெப்.இளங்கோ சுரேஸ்மன்** (வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்-சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா)

யாழ்-பத்தமேனிப்பகுதியில் சிறிலங்காக் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.முகுந்தன்-பிறேம் மாஸ்ரர்** (ஐயாத்துரை சண்முகேஸ்வரன்-நெல்லியடி வடக்கு-கரவெட்டி,

மணலாறு-அளம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜீவராணி** (மல்லிகா ஜஸ்ரின்-இளவாலை-யாழ்)

மட்டு-கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய ஆதரவாளரான,

**கதிர்காமப்போடி கனகரத்தினம்** (அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை-மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9576)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

### - தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் -

# தோல்வியின் மத்தியிலும் நிலைபெறும் மறுமலர்ச்சி தி. மு. கவின் அரசியற்தளம்

தமிழ்நாட்டின் பெருந்துறை மற்றும் மைலாப்பூர் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தல்கள் மூலம் தமிழக அரசியல் அரங்கில் பெரும் மாற்றங்கள் ஏதும் விளைந்து விடும் என்று எவரும் எதிர்பார்த்துஇருக்கவில்லைத்தான் ஆனால் ஆளும் கட்சியை தோற்கடித்து ஊழல்கள் மிகுந்தஅ இ.அ.தி.மு.க அரசைக் கலைத்துவிடுவதற்கு அங்கீகாரம் தாருங்கள் என்ற காங்கிரசுக் கட்சியினரின் பிரசாரம் ஒருபுறம்; தமது எழுச்சியைப் பதிவு செய்துகொள்ள விரும்பிய வை. கோபாலசாமியின் மறுமலர்ச்சி தி மு.கவினரின் கோஷங்கள் மறுபுறம்; தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஜீவமரணப் போராட்டம் ஒன்றையே நடத்த வேண்டிய நிலையில் இருக்கும் மு கருணாநிதியின் தி மு.க மற்றுமொரு புறம்; தமது பிரசன்னத்தை மட்டும் காட்டிக் கொள்ளும் இடதுசாரிகளும் பேருக்காக தேர்தல்களில் வேட்பாளர்களாகும் சுயேட்சைகளும் இன்னுமொரு புறம் தேர்தல் களத்தை பரபரப்பாக்கிக்கொண்டிருந்தனர்.

ஆளும் கட்சியின் மீதுஊழல் குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக சுமத்தி ஊழல் புரிவதில் கின்னஸ் சாதனையை நிலைநாட்டியிருப்பதாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமித்த குரலில் கூக்குரலிட்டது அ.இ.அ.தி.மு.கவிற்கு ஒருவகையில் தன்மானப் பிரச்சினையாகி விட வெற்றிக்கனியை எப்படியேனும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அக்கட்சியும் சுறுசுறுப்பாகியது. 232உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டப்பேரவையில் இந்த இரண்டு தொகுதிகளிலும்அ.இ அ.தி மு.கதோற்றிருந்தாலும் கூட சட்டப் பேரவை நிலையில் பெரும் மாறுதல் எதுவும் ஏற்பட்டிருக்கப்போவதில்லை என்பதும் இந்த இரண்டு தொகுதிகளிலும் அ.இ.அ.தி,மு.கவே பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்றிருந்தது என்பது இங்கு ஞாபகத்தில்இருத்திக்கொள்ள வேண்டியதே.

### எங்கும் 'ஜே' மயம்

தமிழக அரசியல் அரங்கில் தமக்கு பிடித்தமானதலைவர்களுக்கு விதம்விதமாக பெயர் சூட்டி அழைத்து தலைவரை மகிழ்வித்துக்கொள்ளும் விடயம் ஒன்றும் புதுமையானவிடயமல்ல. புரட்சித்தலைவர், காவிய நாயகன் என்றெல்லாம் முன்னைய முதல்வர்கள் அழைக்கப்பட்டது தெரிந்ததே. அந்த வகையில், தமிழகத்தின் இப்போதைய முதல்வர் ஜெயலலிதாவிற்கும், 'தமிழகத்தின் ஜான்சிராணி' என்றும் 'சிந்தனைச்செல்வி' 'புரட்சித்தலைவி' என்றும் இன்னும் எத்தனையோ விதம் விதமான பெயர்களில் எல்லாம் அழைத்து மகிழ்ந்துவிட்ட மாநில அமைச்சர்கள் இப்போது இன்னும் ஒருபடி மேலேபோய் அமைச்சு செயற்படுத்தும் திட்டங்கள் முதல் புதிய கண்டுபிடிப்புகள் வரை அனைத்துக்கும் ஜெயலலிதாவின் பெயரை சூட்டி வருகின்றனர்.

ஜெயலலிதாபெயரில் போக்குவரத்து கழகம் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதையும், வர்த்தக வளாகங்கள், தெருக்கள், கிராமங்கள், கட்டிடங்கள் மட்டுமன்றி புதிய வகை நெல்லுக்கு கூட ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்டிருப்பதையும் இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர் என்று பெயர் சூட்டப்படும் என்று மாநில உள்ளாட்சி அமைச்சர் டி எம். செல்வகணபதி அறிவித்துள்ளார்.

மதுரை, திருப்பரங்குன்றம், அழகர்கோயில் போன்ற கோயில்களுக்கு பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக நிறுத்தி வைக்கப்பட இருக்கும் அலங்கார உலா ரதத்திற்கு ஜெயலலிதா பெயர் சூட்டப்படும் என்கிறார் இந்து அறநிலையத் துறை அமைச்சர் நடேசன்பால்ராஜ் மாவட்டங்கள் தோறும் அமைக்கப்படும் மட்டுமாளிகைகளுக்குஜெயலலிதாவின் நாமம் சூட்டப்படும் என்கிறார் கதர் கிராமத் தொழில் அமைச்சர் ஈஸ்வர

**இளையவன்**

மூர்த்தி நிதி நிலைமைக்கு ஏற்ப ஜெ டி வி. என்ற பெயரில் புதிய தொலைக்காட்சி அலை அமைப்பது பற்றி ஆலோசிப்பதாக அமைச்சர் தென்னவன் அறிவித்துள்ளார்.

கல்வித்துறையும் புதிய திறந்தவெளி பல்கலைக்கழகத்திற்கு ஜெயலலிதா பெயரைச் சூட்டி தன் பங்கையும் பதிவு செய்துள்ளது.

ஆக மொத்தத்தில் தமிழ்நாட்டின் எந்த மூலையில் எப்படித் திரும்பினாலும் ஜெயலலிதாவின் பெயர்தான் ஒலிக்க வேண்டும் ஜெயலலிதாவின் பெயர் துலங்கவேண்டும் ஜெயலலிதாவின் பெயர் எல்லோரது உதடுகளாலும் உச்சரிக்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் இலட்சியமாக உள்ளது. ''போகிற போக்கைப் பார்த்தால் சென்னை மாநிலம் என்று இருந்ததை தமிழ்நாடு என்று மற்றிய பேரறிஞர் அண்ணாவின் எதிர்பார்ப்பிற்குமாறாக இது ஜெயலலிதா நாடு என்று பெயர் மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை'' என்று கருணாநிதி கிண்டலடித்து இருப்பினும், அது அவ்வளவாக எடுபடவில்லை என்பதையே இடைத் தேர்தலின் முடிவுகள் எடுத்துக்காட்டுவதாக கொள்ளலாம். எனினும் ஏற்கனவே தான் பெற்றிருந்த இடங்களை மீண்டும் பெரும் பிரயத்தனங்களுடன் கைப்பற்றியிருப்பதை அ.இ.அ.தி.மு.க.வின் சாதனையாகக் கருதுவது பொருத்தமுடையதல்ல.

### ம. தி. மு. க வின் நிலை

உண்மையான தி.மு.க நாங்கள் தான் என்று மார்பு தட்டி எழுச்சியுடன் புதியதொரு திசையை நோக்கி புதியதொரு பாதையில் புதிய அணுகுமுறையில் இந்த இடைத்தேர்தலை சந்தித்தவை. கோபாலசாமியின் மறுமலர்ச்சி தி. மு. க.விற்கு இந்தத் தேர்தல் மூலம் கிடைத்திருப்பது வெற்றியா? தோல்வியா? என்பதை இப்போதும் நிச்சயமாகக் கூற முடியாது ஏனெனில் தேர்தல் நடத்தப்பட்ட இரு தொகுதிகளில் ஒன்றின் முடிவு இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை அறிவிக்கப்பட்ட பெருந்துறை தொகுதியை ம தி. மு க கைப்பற்றவில்லை

பெருந்துறை தொகுதியில் அ.இ.அ.தி.மு.க சுமார் முப்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றுள்ளது அ.இ அ.தி.மு.கவிற்கு இத் தொகுதியில் 55730 வாக்குகளும், அதற்கு அடுத்தபடியாக வந்த வைகோ வின் ம.தி.மு.க விற்கு 23,452 வாக்குகளும், கிடைத்துள்ளது; தி.மு.கவின் ஆதரவுடன் போட்டியிட்ட மார்க்சிய கம்யூனிஸ்ட்டிற்கு 20,449 வாக்குகளும் அதற்கும் அடுத்தபடியாகவே காங்கிரஸ் கட்சிக்கு 12,371 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன ஆகவே தி.மு.க விற்கும் ம.தி.மு க. விற்கும் இடையிலான போட்டியில் வெற்றி எந்தப் பக்கம் என்பதைக் கணிக்க இந்தத் தொகுதியின் முடிவு பலன் தராது. ஆனாலும் தி.மு.க ஆதரவு வாக்குகள் சிதறாமல் இருந்திருந்தாலும் கூட பெருந்துறை தொகுதியை தி.மு.க கைப்பற்றுவது சாத்தியமாகி இருக்காது என்பதை துணிந்து கூற முடியும்.

மைலாப்பூர் தொகுதியின் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாத போதும் இத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க கடும் போட்டியாளராக தி மு கவே விளங்கியிருக்கிறது என்பதும் வை கோவின் மறுமலர்ச்சி தி மு.க. காங்கிரசிலும் பார்க்க குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. எனினும் இரு தொகுதிகளிலும் வைகோவில் ம.தி.மு.க கணிசமானளவு வாக்குகளைப் பெற்றிருப்பதை உற்றுக் கவனிக்கும் போது வை. கோபாலசாமியின் அணிக்கு முயற்சி இன்னும் தேவைப்படினும் பிரகாசமான எதிர்காலத்திற்கு வாய்ப்பு உண்டு எனலாம் பெருந்துறையில் தி.மு க ஒதுங்கிக் கொண்டதும் மைலாப்பூரில் தி மு க இரண்டாமிடத்தைப் பெற கடும் முயற்சி மேற் கொண்டதும், வை, கோ அணியினருக்கு உற்சாகத்தை ஊட்டக் கூடியதாகும்

### காங்கிரஸின் பரிதாபம்

மத்தியில்ஆளும் கட்சி என்று காங்கிரஸ் கட்சி மார்பு தட்டிக் கொள்ளும் போதும் தமிழகத்தில் திராவிடக் கட்சிகளில் ஏதேனும் ஒன்றின் ஆதரவு இல்லாவிட்டால் அது மண் கவ்வ வேண்டியதுதான் இது இடைத்தேர்தல் மூலம் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது. தேர்தல்நடைபெற்ற இரு தொகுதிகளிலும் காங்கிரஸ்கட்சி கட்டுப்பணத்தைக்கூட மீளப்பெறமுடியாத பரிதாபகரமான நிலைக்குதள்ளப்பட்டுள்ளது காங்கிரஸ் கட்சியின் உட்பூசல்களும், கோஷ்டி மோதல்களும் இந்த நிலைமைக்கு பெரும் பங்காற்றியிருக்கக் கூடும். எனினும் தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் செல்வாக்கும் பெரியார்-அண்ணாபோன்றபெரும் தலைவர்கள் ஊட்டி வளர்த்த இனமான உணர்வுகள் இன்னமும் வற்றிப்போய் விடவில்லை என்பதும் ஒரு முக்கிய காரணமாகும். மத்தியில் ஆளும் கட்சியாக இருந்தபோதும் மாநிலத்தில் ஏதேனும் ஒரு திராவிடக் கட்சியின் தோளில் தொங்கிக் கொண்டால் மட்டுமே காங்கிரஸ் கட்சி உயிர் வாழ முடியும் என்பது முகத்திலறைந்தாற் போல உணர்த்தப்பட்டுள்ளது.

தி. மு க. வின் நிலையைப் பொறுத்து கருணாநிதிக்கோ அல்லது தி. மு. க. தலைமைக்கோ சரிந்து கொண்டிருக்கும் தமது செல்வாக்கை தூக்கி நிறுத்துவதற்கு இந்த தேர்தல் முடிவுகள் ஒரு போதும் உதவப்போவதில்லை. தொகுதிகளின் ஆசனங்களை வெல்வது என்பதை விடவும் வை கோ அணியினருடனான பலப்பரீட்சையே இத் தேர்தலில் முக்கியமானதாக இருந்தது. அதுபோலவே வை. கோ. அணியினருக்கும் அ இ அ தி மு. க வை தோற்கடிப்பதை விடவும் தி மு க. வின் உரிமையாளர்கள் தாமே என்பதை நிரூபிப்பதே முக்கியமாக இருந்துள்ளது இது அவர்களின் அரசியல் எதிர்காலத்திற்கு அத்தியாவசியமாக இருந்துள்ளது இந்தப் பலப்பரீட்சையை பொறுத்தவரையில் வை கோ. அணி பெருந்துறையில் தெளிவான வெற்றியைப் பெற்றிருக்கிறது. மைலாப்பூரிலும்கணிசமான வாக்குகளைப்பெற்றுக் கொண்டுஎதிர்காலத்தில்நிலைக்கப்போகும் சக்தி என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளது. தி மு கவை இனிமேலும் வெற்றிப்பாதை நோக்கி வழி காட்ட கருணாநிதிக்கு முடியுமா என்ற கேள்வியையே இந்த இடைத்தேர்தல் முடிவுகள் எழுப்பியுள்ளன உதய சூரியன் சின்னமும், கறுப்பு, சிவப்பு கொடியும் தமது கட்சிக்கு மீண்டும் கிடைத்து விட்டதைக் காட்டிப் பெரும் போராட்டத்தின் மத்தியில் தாம் காப்பாற்றிய கொடிக்கும் சின்னத்திற்கும் மக்கள் அங்கீகாரம் கிடைக்க இத் தேர்தல் முடிவுகள் பயன்படும் என்று எண்ணிய கருணாநிதிக்கு இத்தோல்விகளைச் சீரணிப்பதே கடினமாக இருக்கக்கூடும். ஆனால் உதய சூரியன் இப்போது மேற்கு வானில் சஞ்சரிகத்தொடங்கி விட்டது என்பதை மட்டும் இனி நிச்சயப்படுத்திக் கூறலாம்.

# உடல் ஊனமுற்றோரின் வாழ்வில் மறுமலர்ச்சி தரும் கணனிகள்

ஜூலி வில்கின்சனுக்கு முப்பது வயது. சிகாகோ நகரின் பிரதான பகுதியில் உள்ள அமெரிக்கன் தேசிய வங்கியில் கணனி ஆய்வாளராக பணீ புரிகிறார் தினம்தோறும் அவர் தமது அலுவலகத்திற்கு வந்தவுடன் கணனியை இயக்கிவிட்டு, அன்றைக்கு வந்துள்ள கடிதங்களையெல்லாம் அந்தக்கணனி மூலமாகவே படிக்கிறார் அலுவலக அறிக்கைகளைத் தயாரிக்கிறார் தம் அலுவலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டு குறிப்புகளை எடுக்கிறார்.

இதிலென்ன வியப்பு இருக்கிறது? கணனி ஆய்வாளர் ஒருவரின் அன்றாடப் பணிகள் தாமே இவை என வினவலாம்; இதில் வியப்பு எதுவுமே இல்லை ஜூலி விக்கின்சன் பார்வையற்றவர் என்பதைத்தவிர விசேடமாக உருவாக்கப்பட்ட தமது கணனி மட்டும் இல்லாமல் போனால், தம்மால் பணியாற்றுவதே கடினம் என்கிறார் ஜூலி வில்கின்சன் சிறந்த தொழில் நுட்பம்தான் தனக்கு இந்த வேலையைத் தேடித் தந்துள்ளதாக கூறுகின்றார்.

ஜூலி பயன்படுத்துகின்ற கணனியில், பார்வையற்றவர்கள் படிக்கக்கூடிய 'ப்ரெய்ல்' எழுத்து முறை இணைக்கப்பட்டுள்ளது. அன்றியும் இடப்படும் கட்டளைகளை ஏற்றுச் செயல் படுத்தவும் அந்தக்கணனியில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நவீன கணனியைப் பயன்படுத்தி, ஜூலி தனது கடிதங்களைப் படிக்கிறார், தனக்கு வேண்டிய கடிதங்

**சிவபாலன்**

களையும் அறிக்கைகளையும் இந்தக் கணனியிலேயே அவர் தயாரிக்கிறார், கையிலேயே எடுத்துச் செல்லக் கூடிய 'ப்ரெய்ல்' சாதனம் ஒன்றையும் ஜூலி வைத்திருக்கிறார் அலுவலக ஆலோசனைக் கூட்டங்களின்போது, அதிலேயே அவர் குறிப்புகள் எடுக்கிறார் பின்பு அக் குறிப்புகளைத் தமது பிரதான கணனிக்கு மாற்றிக் கொள்ளவும் அதில் வசதி உள்ளது.

ஜூலிவில்கின்சனைப் போல ஊனமுற்றோர் ஆயிரக் கணக்கான பேர் வசதியாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றதொழில் நுட்பங்களை உருவாக்கித் தரும் பெருமை பில்சால்யர்ஸ் என்பவருக்கே உரியதாகும் ஊனமுற்றோருக்கு உதவும் 'நாஷனல் ஈஸ்டர்சீல் சொசைட்டி' என்னும்நிறுவனத்தின் கணனி சிறப்புத் தொழில் நுட்பப் பிரிவின் இயக்குனராக பில் சால்யர்ஸ் பணியாற்றுகிறார். ஊனமுற்றவர்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் கணனி முறைகளில் சிறப்புத் தொழில் நுட்ப வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணியில்சால்யர்ஸும்அவரது சகாக்களும் ஈடுபட்டுள்ளனர் ''தகுந்த தொழில் நுட்பம் மட்டும் இருந்தால் எல்லாத் தடைகளையும் மீறித் திறமையாகச் செயலாற்ற முடியும்'' என்று சால்யர்ஸ் குறிப்பிடுகிறார்.

தற்போது அமெரிக்காவில் ஊனமுற்றோர் 4 கோடியே

(11 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கவின் உட்கட்சிப் பூசலால் எரிந்து சாம்பலாகிய மலையகமக்கள் எதிர்காலம்

கௌதம புத்தரின் வாழ்க்கைக் காட்சிகள் சித்திரங்களாக வீதியோரங்களை அலங்கரிக்க, வெளிச்சக் கூண்டுகள் எங்கும் தொங்கவிடப் பட்டுவெள்ளொளியை உமிழ்ந்து கொண்டிருக்க, கௌதம புத்தரின் பிறப்பு, பரிநிர்வாணம் உட்பட மூன்று சிறப்புக்களைக் கொண்டதாக பௌத்தர்களால் கருதப்படும் வெசாக் தினத்தில் பௌத்தர்கள் பரவலாக வாழும் மத்திய மாகாணத்தில் ஏற்பட்ட பெரும் தீயில் நுவரெலியா மாவட்ட அரச அதிபர் செயலகம் சாம்பல் மேடாகியது

இச்சம்பவத்தில், 177 ஆண்டு காலப் பழமை வாய்ந்த நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் செயலகம், கச்சேரி தீக்கிரையானது. இந்தத் தீச்சுவாலையில் சிக்கி பண்டைய சிங்கள மரவேலைப்பாடுகள் நிறைந்த கச்சேரி முற்றாக நாசமாகியிருக்கிறது. இந்தக் கச்சேரியில் இயங்கி வந்த தொழில் திணைக்கள அலுவலகம் - திட்ட அமுலாக்கல் அமைச்சின் பிராந்திய அலுவலகம், வாகன லைசன்சுகள் வழங்கும் பிரிவு, அரசாங்க அதிபரின் நிர்வாகப் பிரிவு, அரசாங்க அதிபரின் அலுவலகம், புள்ளி விபரவியல் அலுவலகம் என்பன முற்றாக நாசமாகியிருப்பதுடன் இப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த சகல ஆவணங்களும் சாம்பராக்கப்பட்டுள்ளன.

## திட்டமிட்ட சதியா தற்செயல் விபத்தா

இந்தச் சம்பவம் தற்செயலான தீ விபத்தா அல்லதுதிட்டமிடப்பட்ட சதிநாசகாரச் செயலா என்பது குறித்து இப்போது பலத்தசர்ச்சை ஏற்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரியான நிகால் மாதிவெல கூறுகையில், மேலோட்டமாகப் பார்க்கும்போது தற்செயல் விபத்து போலவே தோன்றுகின்றது என்றார். வெசாக் தினத்தை முன்னிட்டு கட்டப்பட்டிருந்த வெளிச்சக் கூண்டு ஒன்றில் ஏற்பட்ட தற்செயலமின் ஒழுக்கு தான் தீ பரவுவதற்கான காரணம் என்றும், அலுவலகநேரம்முடிவடைந்த பின்னர் மாலை ஏழு மணியளவில் தீ பிடித்துக் கொண்டதால் அணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்றும், அவர் மேலும் கூறுகின்றார் ஆனால் மின் ஒழுக்கினால் இந்தத்தீ விபத்து ஏற்பட்டு விடவில்லை எனவும் சிலசமயம் மின்ஒழுக்கினால் தீ ஏற்பட்டிருந்தாலும் கூட இத்தகைய பாரியசேதம் ஏற்பட்டிருக்கும் சாத்தியப்பாடு இல்லை எனவும் மத்திய மாகாண மின்பொறியியலாளர் தெரிவிக்கின்றார்.

இந்த நிலையில் தீ தொடர்பாக துறைசார் வல்லுநர்கள் தெரிவிக்கும் கருத்தே மிகவும் ஏற்புடையது. இதனைத் தவிர்த்து அரசியல்வாதிகளோ அன்றிப் பொலிசாரோ எழுமாற்றமாகத் தெரிவிக்கும் ஆதங்கமற்ற கருத்துக்களை பொருட்டாகக் கொள்ள முடியாது. இந்த வகையில் மின்பொறியியலாளர் தெரிவிக்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இது திட்டமிட்டுச்செய்யப்பட்ட ஓர் அரசியல் சதிவேலையென்றும் தற்செயலாக ஏற்பட்ட செயல் அல்ல என்றும் கூறமுடியும்.

மேலும் தீபற்றிக்கொண்ட செய்தி உணரப்பட்ட பின்பும் மின் இணைப்பு துண்டிப்பு துண்டிக்கப்படுவதற்கு ஒன்றரை மணிநேரம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. என்பதும், 48 மைல் தொலைவிலுள்ள கண்டியிலிருந்து தீயணைப்பு இயந்திரம் வந்து சேருவதற்கு ஐந்து மணி நேரத்திற்கும் மேல் எடுத்திருக்கிறது என்பதும் இச்சம்பவம் திட்டமிட்ட சதிச்செயல் என்பதை உணர்த்தக் கூடியவையாகும். அதாவது தீயணைப்புப் படையினரின் வருகை தீயணைப்பிற்காக அல்லாமல் சாம்பல் அள்ளுவதற்கானதாகவே இருந்துள்ளது

முற்கூட்டிய திட்டமிட்ட சதிச் செயலினால்தான் நுவரெலியா கச்சேரி தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. நுவரெலியா கச்சேரியின் பிறப்பு. இறப்பு பதிவுப் பகுதி மற்றும் ஆட்பதிவுப் பகுதி என்பவற்றிலேயே முதலில் தீப்பற்றிக்கொண்டுள்ளது மலையக மக்களைப் பொறுத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு ஆவணச் சான்றுகள் அவசியமானது என்பதும், அத்தகைய ஆவணச சான்றுகளைப் பெறுவதற்கான பதிவுகள் மலையக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நுவரெலியா மாவட்ட அரசாங்கச் செயலகத்தில் குவிக்கப்பட்டிருந்தது என்பதும், இந்த ஆவணங்கள் அனைத்தும் இப்போது வெறும் சாம்பலாக்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும். இந்த வகையில் தீ எப்படித் தோன்றியிருப்பினும், இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யாராக இருப்பினும், மலையக மக்களின் அரசியல் பலத்தை சீர்குலைக்க அவர்கள் திட்டமிட்டுச் சதி செய்துள்ளனர் என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியும். வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற அவாவில் மலையக மக்களில் பெரும்பாலோர் தத்தமது பெறுவதற்கரிய ஆவணங்களை கச்சேரியில் ஒப்படைத்து வாக்குரிமைக்காக காத்திருந்த வேளையில் தான் அவர்களது எதிர்பார்ப்புகளை எல்லாம் இத் தீ சாம்பராக்கி விட்டுள்ளது.

## பரஸ்பரம் பரிமாறும் குற்றச்சாட்டுக்கள்

நுவரெலியா மாநகர முதல்வரும், சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்திற்கு நெருக்கமானவருமான திருமதி நளின் ரேணுகா ஹேரத் இத் தீ வைப்பு தொடர்பாக குற்றம் சாட்டப்படுகின்றார். பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் பெற்றுவிட்ட காமினி திசாநாயக்காவும், அமைச்சர் தொண்டமானும் நுவரெலியா விஜயம் செய்ய திட்டமிட்டிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு காட்டும் வகையிலேயே இத் தீவைப்பு இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்துள்ள மாநகர முதல்வர் திருமதி நளின் ரேணுகா ஹேரத், காமினி திசாநாயக்காவையும் அவரது ஆதரவாளர்களையும் குற்றம் சாட்டுகின்றார். அதிலும் குறிப்பாக சிரேஷ்ட பொலிஸ்அதிகாரியான நிகால் மாதிவெல மத்திய மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்ற பின்னர்தான் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். தமது ஆதரவாளர்கள் மிரட்டப்படுவதாகவும், அவர்களது வீடுகள் கல்வீச்சுக்கு இலக்காகுவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருப்பதுடன் இத் தீவைப்பின் பின்னணி ஐ. தே. க. அரசியல்வாதி ஒருவருக்கு ஆதரவான காடையர்களின் செயலாக இருக்கலாம் எனவும் குற்றச் சாட்டு தெரிவித்துள்ளார்.

## ஊகங்களும் சந்தேகங்களும்

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அண்மையில் நடந்து கொள்ளும் முறையில் வெறுப்படைந்துள்ள ஐ. தே. கவினர் அரசாங்க செயலகத்திற்கு தீ மூட்டி தமது எதிர்ப்பை காட்ட முனைந்துள்ளார்களா? அல்லது ஆரம்பத்தில் டி. பி. தெரிவித்து வந்த இனவாதக் கருத்துக்களை "உயரிய சிந்தனை" என நினைத்து மயங்கிய கண்டிய சிங்களவர் குழாம் டி. பி. யின் போக்கில் தடுமாற்றத்தைக் கண்டு அவருக்கு பாடம் புகட்ட எடுத்த

**நிமலராஜன்**

நடவடிக்கையா? அல்லது மீண்டும் ஒரு ஜே. வி. பி. யுகம் தோன்றுவதற்கான அத்திவாரமா? அல்லது ஐ. தே. கவின் உள் வீட்டு சண்டையின் பலப்பரீட்சையா? என்பன போன்ற பல கேள்விகள் நுவரெலியா மாவட்ட அரசாங்க செயலகம் எரிந்து போன தீச்சுவாலையின் மூலம் வெளிச்சம் போட்டு காட்டப்பட்டுள்ளன.

எனினும் காமினியின் மீள் வருகைக்குப்பின்னர் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சுகாதார மகளிர் விவகார அமைச்சருமான திருமதி ரேணுகா ஹேரத் ரணவீர பதவியிலிருந்துஊழல்படிப்படியாக பெரிதக்கப்பட்டு வருகின்றது. திருமதி ரேணுகா பதவி விலக வேண்டும் அல்லது விலக்கப்படுவார் என்ற தோரணையில் ஐ. தே. க. தலைமை மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நுவரெலியாவில் எழுந்த நெருப்பு முற்றுப் புள்ளி வைக்கும் எனவும் கூறப்படுகிறது.

மேலும் பாதாள உலக கிரிமினல்கள் மீது டி. பி. விஜேதுங்கா அரசின் பார்வை திரும்பியிருப்பதும் அரசின் கரங்கள் அவர்களைத் தொடர்ந்து வருத்தி வருவதும் இந்த தீச் சுவாலை எழுவதற்கு காரணமாகிஇருக்கலாம் பிரேமதாசா ஆதரவாளர்களைக் களையெடுக்கும் டி.பி. யின் போக்கிற்கு கொள்ளி வைக்கும் செயலாக இது நடைபெற்றிருக்கலாம் என்பதும் புறக்கணிக்கப்படக் கூடியதல்ல.

இவ்வாறு பல கேள்விகள் கேட்கப்படினும் ஐ தே கவிற்குள் ஏற்பட்டுவரும் மறுசீரமைப்பும், தேர்தல்களை எதிர்நோக்கி டி பி விஜேதுங்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளும் காரணம் என்பதில் சந்தேகமில்லை இதில் காமினி திசாநாயக்காவின் மீள் வருகையும், தொண்டமானும் காமினியும் கைகோத்துக் கொண்டமையும், டி பி. விஜேதுங்காவின் கொள்கை மாற்றமும் முக்கியமானவையாகும்.

எது எப்படியிருப்பினும் இப்போது பாதிக்கப்பட்டிருப்பது இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் மட்டுமே என்பது தெளிவு தமது பிரஜாவுரிமையை கடதாசிகளில் மட்டுமே கொண்டிருந்த அவர்களிடமிருந்து அதுவும் பறித்தெடுக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது முற்றாக எரிந்து சாம்பராகியுள்ள தொழிற் திணைக்களத்தின் ஆவணங்களின் மூலம் நுவரெலியாவில் பெரும்பான்மையாகவுள்ள தேயிலைத் தோட்டங்களின் தொழிலாளர்கள் ரத்தமும் வியர்வையும் சிந்தி பெற்றுக் கொண்ட உரிமைகளும் சாம்பலாகிப் போயிருக்கும் பதிவுகள் மூலம் பெற்றுக் கொண்டிருந்த பிரஜாவுரிமைகளை சாம்பலில் இருந்து தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆக அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் அரசியல் கட்சி மாற்றங்களில் ஒரு அங்கம் தான் நுவரெலியாவில் எழுந்த தீச் சுவாலை என்பதும், வெசாக் பண்டிகை தினத்தை முன்னிட்டு பௌத்த சிங்களப் பேரினவாதம் ஏற்றிய வெளிச்சக் கூண்டில் தமிழர்களின் நல்வாழ்வு மீண்டுமொரு முறை சாம்பராக்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டிய தொன்றாகும்.

---

# மரபு வழி மலேரியாவால் உலகில் 4-வது சிசு மரணம்

மரபுவழி மலேரிய (Genetic Malaria) நோயினால் இவ்வருட மே மாதம் யாழ் போதனா மருத்துவ மனையில் ஒருநாள் சிசு ஒன்று இறந்துள்ளது. உலகில் மிகவும் அரிதாகக் காணப்படும் இம் மரபு வழி மலேரியா நோய்த் தாக்கத்தினால் இது வரை காலமும் மூன்று பிள்ளைகள் மட்டுமே இறந்துள்ளதாகவும் சென்ற மே மாதம் இறந்த சிசுவுடன் சேர்க்கும்போது இது நான்காவது சிசு என்பதும் குறிப்பிடப்படுகின்றது.

அவுஸ்திரேலியா, ஒல்லாந்து மற்றும் இலங்கையில் அனுராதபுரத்தைச் சேர்ந்தவெ ன மூன்று பேர் மரபு வழி மலேரியாவினால் இறந்ததாகவும் தற்போது அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த ஒருநாள் சிசு இறந்துள்ளது.

இச் சிசுவின் தாய் கர்ப்பம் உற்று இருக்கும் போது கிளிநொச்சியில் இருந்ததாகவும் கிளிநொச்சியில் இருக்கும்போது மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு உரிய முறையில் மலேரியா நோய்க்கான மருந்துப் பொருட்களை உட்கொள்ளவில்லை என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில் சிசு தாயின் வயிற்றில் இருக்கும்போது செங்குருதியுடன் மலேரியாக் கிருமி முட்டையாகச் சென்று சிசுவின் உடலிலே வெடித்து அப்போது முட்டை பருவத்தில் சென்றமையினால் நோய்க்கிருமிகளைத் தடுக்கும் தடையான நச்சுக்கொடியின் தடையைத் தாண்டி இக்கிருமி சென்றுள்ளது. அப்படி வெடித்த கிருமி நிலையில் சென்றிருந்தால் அதனை நச்சுக்கொடித் தடை தடுத்து விடும்.

எனவேதான் சிசு பிறந்து இருபத்தி நான்கு மணி நேரத்தில் மலேரியா நோய் தாக்கம் கொண்டு காணப்பட்டு இருந்ததாகவும் அதனாலே இச் சிசு இறந்துள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சாதாரணமான நுளம்பு கடித்து மலேரியா பரவுவதனால் நுளம்பின் மூலம் மலேரியா கிருமி சென்று சுமார் பத்து நாளாவது உடலில் இருந்த பின்னரே அதன் தாக்கத்தை வெளிப்படுத்தும் எனவே மரபு வழியிலே இச்சிசுவுக்கு இக் கிருமி உட்புகுந்து இருக்கின்றது.

இதேவேளை இச் சிசுவின் மரணம் தொடர்பாக மரணத்திற்கான காரணத்தை செப்டிசீமியா என காரணம் காட்டப்பட்டுள்ளது. இது மிகவும் வருந்தத் தக்க விடயமாகும் ஏனெனில் பிறந்த ஒருநாள் குழந்தைக்கு செப்டிசீமியா ஏற்பட காரணம் என்ன?

செப்டிசீமியா என்றால் குருதி அழுகல் அல்லது நோய்களின் உச்ச நிலை தாய்க்கு மலேரியா முன்னர் வந்து குணமானது தவிர தற்போது தாய் நலமேயுள்ளார் ஆகவே குழந்தைக்கு குருதி அழுகல் நிலையை அடைந்திருப்பின் தாயும் அந்நோய்க்கு ஆளாகியிருக்கவேண்டும் அவ்வாறு இல்லாத நிலையில் அது மலேரியாவை தவிர செப்டிசீமியா எனக் குறிப்பிட்டதன் மூலம் வைத்திய ஆய்வுகளைத் தடுத்து விடக்கூடாது.

– என். ஆர்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# அவநம்பிக்கையின் அடிப்படையில் பிறந்த அமைதி உடன்பாடு

**பாலகுமாரன்**

உடன்பாடுகளுக்கெல்லாம் தாய் உடன்பாடு- அமெரிக்கா, ருஷ்யா என இரு முதன்மை நாடுகளாலும் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரே உடன்பாடு இசுரேலிய-பாலத்தீனிய உடன்பாடு என அது சென்றவருடம் செப்டம்பர் 13 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டபோதுபோற்றப்பட்டது. அன்று அரபாத்தோடு கைகுலுக்க அழைக்கப்பட்ட போது முன்வராமல் தயங்கிய யிட்சாக் றபின் இன்றளவும் தனது தயக்க நிலையை மாற்றிக்கொண்டதாகத் தெரியவில்லை மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கப்பட்ட காசா-யெரிக்கோ பகுதிகளிலிருந்து சென்ற ஏப்ரல் 13 ஆம் திகதியே வெளியேறி இருக்க வேண்டிய இசுரேலிய இராணுவத்தின் நகர்வை குறிக்கும் முதலாம் கட்டமே இழுபறியாகி மீண்டும் அதுபற்றியே பேசநேரிட்டது. இப்பேச்சுகளின் பின்னர் கடந்த மே மாதம் 5 ஆம் திகதி கெய்ரோவில் முதலாம்கட்டம் தொடர்பான உடன்பாடு கைச்சாத்தாகியது.

இவ்வுடன்பாடு கைச்சாத்தானபோது நடந்தேறியநிகழ்வுகள் பெரும் குழப்பத்தையே எவர் மனதிலும் விளைவித்தன. கெய்ரோவின் சருவதேச மாநாட்டுமண்டபத்தில் 2500 பார்வையாளர்கள் பார்த்திருக்க- அமெரிக்கவெளிவிவகாரச் செயலர்வாரன் கிறித்தோபர், எகிப்திய சனாதிபதி முபாரக், ருஷ்ய வெளிநாட்டமைச்சர் அன்றே கொசிரேவ் போன்ற பெரும் தலைவர்கள் முன்னிலையிலேயே கடும் கோபத்துடன் பிரதமர் றபின் வாக்குவாதப்பட-அரபாத்தோ கல்லைப் போல் இறுகிய முகத்தோடு நிற்க - பெரும் குழப்பமே மேடையில் நிகழ்ந்தது பின் எல்லோருமே மீண்டும் திரைக்குப் பின்னால் சென்று, 40 நிமிடங்களின் பின் வந்த போது, அரபாத் ஏதும் பேசாமல் உடன்பாட்டில் கைச்சாத்திட்டார். முதலில் யெரிக்கோ பகுதியின் எல்லைகள் தொடர்பான வரைபடங்களில் அரபாத் கைச்சாத்திட மறுத்தபோது றபின் வெளியேறப்போவதாக அச்சுறுத்தினார். மேடையிலேயே இத்தலைவர்கள் வாக்குவாதப்பட்ட நிழற்படங்களைப் பார்த்தோர் எதிர் காலம் எத்தகைய சிக்கல்களை தோற்றுவிக்கப் போகின்றது என்பதை உணரக் கூடியதாகியது; எனவே மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சியை ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனிய பகுதிகளுக்கெல்லாம் விரிவாக்குவது எவ்வாறு சுமுகமாக நடக்கப் போகின்றது என்பது விளங்காப்பொருளாகிவிட்டது. இச்சந்தேகங்கட்கு ஏற்றாற்போலவே இசுரேலியப் பிரதமர் பேசிவருகின்றார். அண்மையில் அரபாத் யெருசலேமே தமது தலைநகரம்;அதை மீட்க புனிதப்போர் (ஜிகாத்) நடத்த வேண்டும் என்றும் உடன்பாடு ஒரு தந்திரோபாய இடைக்கால ஏற்பாடு என பேசியதாக கூறப்படுவதை காரணமாக வைத்து அரபாத்தை கடுமையாக விமர்சிப்பதோடு உடன்பாட்டிலிருந்துதான் வெளியேறிவிடுவேன் என்றும் றபின்மிரட்டி வருகிறார். பாலத்தீனிய மக்களின் எதிர்பார்க்கைகள் எதுவாயிருந்தாலும் அதுபற்றி தனக்கென்ன கவலை என்றும் தான் பாலத்தீனிய மக்கட்கு எவ்வகையிலும் கடமைப்பட்டவன் அல்ல என்றும் அரபாத் தனது தலைமையை தக்க வைப்பதில் மட்டுமே கைதேர்ந்தவர் வேறு எதிலுமல்ல என்றும் பாலத்தீனியருக்கு இவ்வுடன்பாட்டை விட்டால் வேறு என்ன வழி? வேறு என்ன தேர்வு? என்றும் மிதப்பாக பேசுகிறார். அது மட்டுமன்றி காசா, யெரிக்கோ பகுதிகளை அரபாத் எவ்வாறு நிருவகிக்கப் போகிறார் என்பதைப் பொறுத்தே தனது அடுத்தநடவடிக்கை அமையும் என்பவர் தனதுஉள்நோக்கத்தை மிகத் தெளிவாகவே விளக்குகின்றார்.

''1967ஆம் ஆண்டு ஆறு நாள் போருக்கு முன்னதான நிலையை நான் ஏற்கப் போவதில்லை ஆனால் பாலத்தீனர் தனியாக பிரிந்து இருப்பதையே நான் விரும்புகின்றேன். ஒரு அளவுக்கு மேல் கலந்து வாழ்தல் ஆபத்தானது நீண்ட காலத்திற்குப் பிரிந்து அருகருகாக இசுரேலியப் பாதுகாப்பிற்கு குந்தகமில்லாமல் வாழ்வதையே விரும்புகிறேன்'' என்றார். ஆழ்ந்து நோக்கின் இக்கூற்றின் உண்மை விளங்குகின்றது

> காசாப் பகுதியைச் சேர்ந்த 11 வயது பாலத்தீனியச் சிறுவன் கூறிய கதையானது -"நாங்கள் முன்பு அரபு- யூதன் என்றொரு விளையாட்டு விளையாடுவோம். அதில் பிளாஸ்ரிக் துப்பாக்கி தாங்கிய யூதன் அரபுகளை தேடிபோடிப்பிடித்து அடிப்பான். இப்போது விளையாட்டு மாறப்போகிறது. அரபாத் எமக்கு நல்லது செய்ய வேண்டும். அல்லாவிட்டால் அரபு -அரபு என்கிற புதிய விளையாட்டை அவரோடு விளையாடநேரிடும். அப்போது எமது கையிலிருக்கும் துப்பாக்கிகள் பிளாஸ்ரிக்காக இராது.

ஆனால் இதேசமயத்தில் அரபாத்தின் நிலையோ மிகுந்த இக்கட்டில் இருக்கின்றது. பேச்சுவார்த்தைகளை தகுந்த முறையில் பயன்படுத்தி தனது மக்களுக்கான நீண்டகால பாதுகாப்புக்களை பெறுவதை விடுத்து கொடியை பறக்கவிடுவது பற்றி, முத்திரை, கடவுச்சீட்டு சொந்தமாக அச்சடிப்பது பற்றிய மேலோட்டமான விடயங்களில்அவர் தனதுமுழுக் கவனத்தையும் செலுத்தி அதுவும் மிகச்சிரமப்பட்டே இத்தகையவற்றை இசுரேல் தரப்பிலிருந்து பெறமுடிந்ததாக கூறப்படுகிறது. அரபாத்தின் தரப்பினரோ அவர் எதனையும் முற்கூட்டியே திட்டமிடாமல் கடைசி நிமிடத்தில் தனது விருப்பப்படி முடிவுகள் எடுப்பதாக குறைபடுகின்றனர். இவை எல்லாவற்றையும் விட இன்னமும் தீர்க்கப்படாத பாலத்தீனிய தன்னாட்சி பகுதியின் இறுதி எல்லைகள், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள யூதக் குடியேற்றங்களின் எதிர் காலம், 1948கு பின் அகதிகளாக வெளிநாடுகட்குச் சென்ற பாலத்தீனியரினதும் அவர்களது சந்ததியினரும் நாடுதிரும்புதல் (இவர்கள் தொகை 20 இலட்சத்துக்கு மேல்) பற்றிய பேச்சுக்கள் 1996 அளவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்: ஆனால் அதற்குமுன் அரபாத் எதிர் நோக்கும் சிக்கல்களோ கணக்கற்றவைஏனென்றால் 27 வருட அவல வாழ்விலிருந்துவீடுபடத் துடிக்கும் மக்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய வலுவை எங்கிருந்து அரபாத் பெறப்போகிறார் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

இப்போது உடனடியாக எழுந்துள்ள சிக்கல் பாலத்தீனிய நிருவாகத்தினை எவ்வாறு மேற்கொள்வது என்பதும் உடன்பாட்டினை எதிர்க்கும் கமாஸ் போன்ற போராளி அமைப்புகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதும் தான் முக்கியமாக யூதக்குடியேற்றங்கள் காசாவிலும் யெரிக்கோ பகுதிகளிலும் இசுரேலிய இராணுவத்தால் பாதுகாக்கப்படப் போகும் நிலையில்-இவற்றின் மேல் எத்தகைய அதிகாரமும் பாலத்தினியருக்கு இல்லாத நிலையில் பாலத்தீனியரை கொல்லும் யூதரை கைது செய்யும் உரிமை பாலத்தீனிய காவல்துறைக்கு இல்லாத நிலையில்- யூதக்குடியேற்றவாசிகளை- அவர்களை பாதுகாக்கும் இராணுவத்தினரை கமாஸ் இயக்கமும் தொடர்ந்து தாக்கி வரும் போது பெரும் சிக்கல் எழப் போகின்றது. குறிப்பாக காசாப்பகுதியில் இச் சிக்கல் இப்போதேஉருவாகிவிட்டது இராணுவத்தினரைக்கொன்று பாலத்தீனிய தன்னாட்சிப் பகுதிகளில் மறையும் போராளிகளை பாலத்தீனிய காவல் துறை என்ன செய்யப் போகின்றது? இசுரேல் கோரியபடி அவர்களை கைது செய்து கையளிக்குமா? ஏனென்றால் 7 வருடங்களாக போராடி வரும் கமாஸ் இயக்கப் போராளிகள் தம்மை தடுத்தால் பாலத்தீனிய காவல் துறையினரையும் கொல்லுவோம் எனத் திடமாக அறிவித்து விட்டனர் காசாப் பகுதியில் 1987ஆம் ஆண்டு 'இன்ரிபாதா, எனப்படும் மக்கள் கிளர்ச்சியோடு கற்களை. கையில் அகப்பட்டவற்றை இசுரேலிய இராணுவத்தின் மீது எறிந்து வளர்ந்து ஆயுதம் தாங்கிய போராளிகளாக தற்கொலைத்தாக்குதல்களை மேற்கொள்ளும் போராளிகளாக மாறிய பாலத்தீனிய போராட்டத்தின் புதிய தலைமுறையை அடக்குவது இன்று எளிதான விடயமல்ல, குறிப்பாக காசாவில் குடியேற்றப்பட்ட 4000 யூதருக்கும் இப்போது பாதுகாப்பு அளித்து வரும் இராணுவத்தின் மீது இப்போது தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகட்கும் விரைவில் மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி முறை விரிவாக்கம் செய்யப்பட்டு பாலத்தீனிய காவல் துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்படும் போது கெப்ரோன் போன்ற பகுதிகளில் கலந்து வாழும் யூதர்கள் வெளியேற்றப்படாவிட்டால் மிகுந்த இரத்தக் களரி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். ஆனால் கெப்ரோன் பகுதி யூத மத தீவிரவாதிகளோ, 'இந்த நிலம் றபினுக்குரியது அல்ல இசுரவேலின் கடவுளுக்கு உரியது; தாம் அக்கடவுளின் புனிதம் மிக்க படையினர் என கூறி வருகின்றனர். அத்தோடு 9000 தொகை கொண்ட பாலத்தீனிக்காவல் துறையினர் இப்பகுதிகள் எங்கும் படிப்படியாக நியமிக்கப்படும் போது நீண்டகாலமாக வெளிநாடுகளில் தங்கி வாழ்ந்ததினால் காசா மேற்குகரைபற்றிதள நிலைமைகள் புரியாத நிலையில் மேலும் சிக்கல்களை காவல் துறை ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகின்றது.

இவற்றை விட பாலத்தீனிய மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி நிருவாகம் கல்வி, பண்பாடு, சுகாதாரம் சமூக நலன், நேரடிவரிகள், உல்லாசப் பயணத்துறை போன்றவற்றில் மட்டுமே அதிகாரம் கொண்டவை விவசாயம், துறைமுகம், நீர்மின்வலு போக்குவரவு தொலைத்தொடர்புகள் போன்ற முக்கியதுறைகள் இருபகுதியும் இணைந்த பொருண்மிய ஆணைக்குழுவொன்றின் மூலமே நிருவகிக்கப்படும். அத்தோடு பாலத்தீனிய சட்டவாக்கம் தொடர்பாக தடுப்பு (வீட்டோ) உரிமை, ஏனைய வெளிவிவகாரம் யாவற்றிலும் பூரண அதிகாரம் இசுரேலிடம் உண்டு எனவே இப்போது றபின் இம்மாத முடிவில் காசாவில் உள்ள 24000 ஊழியர்க்குதான் வேதனம் வழங்கமாட்டேன் என்றும் மின்சாரம் போன்ற வசதிகளும் வழங்கப்படமாட்டாது என்றும் இப்பகுதிகளை நிருவகிப்பதற்கு தேவையானபணத்தை பெறுவது அரபாத்தின் வேலை என்றும் கூறி விட்டார். இப்பகுதி அபிவிருத்திமட்டுமே பெரும் தொகை நிதி உதவிசெய்ய முன் வந்த சருவதேச அமைப்புகள் இன்னமும் முறையாக இடைக்கால நிருவாக மன்று அமைக்கப்படாததால் உதவி செய்ய தயங்குகின்றன இம்மன்றிற்கு தன்னோடு நீண்டகாலம் வெளிநாடுகளில் தங்கி, மேலைத்தேய உயர் கல்வி பெற்ற புத்திஜீவிகளை அரபாத் நியமிப்பதுபற்றி உள்ளூர் மக்கள் எதிர்ப்பு காட்டுவது இம்மன்றை உருவாக்க தடையாகி விட்டதாக கூறப்படுகின்றது அத்தோடு மிக விரைவில்முறையான தேர்தல் ஒன்றை காசா, மேற்குகரை பகுதிகளில் நடாத்தி பாலத்தீனிய சட்டமன்றிற்கான பிரதிநிதிகளை தேர்வுசெய்யவேண்டும். இத்தேர்தல் எத்தகைய குழப்பத்தின் மத்தியில் நடக்கக்கூடும் என எவராலும் ஊகிக்க முடியும்.




இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பதிகள்

இன்று அமைதி உடன்பாடானது நூற்றாண்டுகாலமாக இரு தரப்பாரிடையேயும் நிலவும், கொழுந்துவிட்டெரியும் பகைமையை தணிக்க பயன்படவில்லை. அவநம்பிக்கை இருதரப்பிலும் உச்ச அளவில் உள்ளது. குறிப்பாக இரு பகுதியினருமே யெருசலேமை தமது புனிதத் தலைநகரமாக கொள்வதோடு அது தொடர்பாக தீவிர நிலைப்பாடுகளை எடுக்கவும் தயங்கார். இப்போது யெருசலேம்பகுதிகளில் யூதக் குடியேற்றங்கள் விரிவாக்கப்பட்டு புதிய வதிவிடங்கள் அமைக்கப்படுவது பலத்தீனியர்க்கு பெருஞ்சினத்தை ஊட்டும் செயலாகின்றது. 1967 ஆம் ஆண்டு போரின் போது கிழக்கு யெருசலேமை கைப்பற்றி தன்னோடு இசுரேல் இணைத்துவிட்டது பின்னர் அதை மேற்குக்கரைப் பகுதியோடு சேர்த்துவிட்டது. ஆனால் பாலத்தீனிய முசுலிம்கட்கோ அது முகம்மது நபியின் புனிதத்தலமாக- பாலத்தீன கிறித்தவர்க்கோ யேசு வாழ்ந்து சிலுவையில் அறையப்பட்ட இடமாக உள்ளது. ஆனால் யூதர்க்கோ யெருசலேம் 3000 ஆண்டுகட்கு முன் டேவிட் மன்னன் ஆண்டதமது சொர்க்கநகரமாக உயிர் மையமாக உள்ளது, இச்சிக்கல் என்று எவ்வாறு தீர்க்கப்படும் என்பது எவரின் புத்திக்கும் எட்டாத விடயம்.

எனவே இத்தகைய நிலையில் செயலர் வாரன் கிறித்தோபர் தென்னாபிரிக்க விடிவோடு பாலத்தீன விடிவை ஒப்பிட்டு சிலாகித்து பேசியதே நேற்று யோகனர்ஸ் பேர்க், நாளை யெரிக்கோ என அரபாத் ஆதரவாளர் கூறுவதே பொருத்தமற்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர் முன்னர்தென்னாபிரிக்க வெள்ளை இனவாத அரசு கறுப்பின மக்களை பிரிப்பதற்காக பண்டுஸ்தான் (Bantustan) என அழைக்கப்பட்ட அதிகாரம் அற்ற வெள்ளையின அரசை நம்பியிருக்கத்தக்கமுறையில்வழங்கிய கறுப்பின தாயகப்பகுதிகளை ஒத்ததேஇன்றையபாலத்தீனிய தன்னாட்சிப் பகுதி என்பதே உண்மை. அதுவே தென்னாபிரிக்காவுக்கும் பாலத்தீனத்திற்கும் காணப்படும் ஒரே ஒற்றுமை என்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பாக்குநீரிணையை 12 வயதில் நீந்திக் கடந்த குற்றாலீஸ்வரன்

ஏப்ரல் மாதத்தின் ஒரு அதிகாலை வேளை தலைமன்னாரின் ரையில் சிறுவன் ஒருவன் நிற்கின்றான். அவனைச் சுற்றி அநேகர் நிற்கின்றனர். கடலில் இந்திய கடற்படை கப்பல்கள், கடலோரக் காவல் படை கப்பல்கள் இவற்றுடன் சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகுகளும் கரையில் காணப்படுகின்றன! இவ்வேளையில் மெல்லிய காற்றுடன் மழையும் சிறியளவில் பெய்த வண்ணம் காணப்படுகிறது. கடல் அலையையே கண்டு மிரண்டு பின்வாங்கும் சிறுவர்கள் போலன்றி அச் சிறுவன் இத்தகைய ஓர் காலநிலை நிலவிய போதிலும் துணிந்து கடலினுள் இறங்குகின்றான் யார் இந்த சிறுவன்? ஏன் இந்த ஏற்பாடுகள்?

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த வயதுகள் மிகவும் குறைந்தவர் சென்னையைச் சேர்ந்த 12வயதான குற்றாலீஸ்வரன் அவரின் இச்சாதனை கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி நிகழ்த்தப்பட்டது ஏற்கனவே மிகிர்சன், பயதியலாத் (மேற்கு வங்காளம்) குருஸ் கொன்ராக்டர், தாரனத் செனோய் (மகாராஷ்டிரா) மற்றும் இலங்கையர்களான சிறிகுமார் ஆனந்தன், நவரட்ணசாமி ஆகியோரும் பாக்குநீரிணையை நீந்திக் கடந்திருப்பினும் குற்றாலீஸ்வரனை விட மூத்தவர்கள் அவர்கள்.



குற்றாலீஸ்வரனின் நீச்சலுக்கு ஆயத்தங்களை ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு விளையாட்டு அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாடு செய்திருந்தது இதற்கு இந்திய கடற்படையும் இந்திய கரையோர பாதுகாப்புப் படையும் உதவி வழங்கின இந் நீச்சல் சாதனையின் போது மூன்று கடற்படை கப்பல்களும் கிரனேட்டுகள், சுறாவை சுட்டுக் கொல்லக் கூடிய ஆயுதங்கள் கொண்ட இழுவைப்படகுகள் நான்கும், ஒரு படகும் உதவிக்கு வந்தன. கடல் நடவடிக்கைக்கு முழுப் பொறுப்பாக இந்திய கடற்படைக் கப்பலான மாஹாரில் லெப்ரினன்ட் ஆர் பண்டி இருந்தார். இச்சிறுவனின் பெற்றோரும் இக்கப்பலில் இருந்தனர். குற்றாலீஸ்வரனுக்குத் துணையாக இரு நீச்சல் வீரர்களும் அருகில் நீந்தி வந்தனர் இம்மூவரினதும் இரு பக்கங்களிலும் இரு இழுவைப் படகுகள் வந்து கொண்டிருந்தன. குற்றாலீஸ்வரனின் பயிற்சியாளர் வீரபத்திரன் உட்பட ஆறு நீச்சல் வீரர்கள் மாறி மாறி குற்றாலீஸ்வரனுக்கு துணையாக நீந்தினர். கடற்படையின் மூன்று பாரிய கப்பலும் தொலைவில் குற்றாலீஸ்வரனுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தன. இக் கப்பல்களினால் நீரில் ஏற்படும் கொந்தளிப்பு நீச்சலைக் குழப்பாது இருக்கவே இந்த ஏற்பாடு.

அதிகாலை 1.10 மணிக்கு குற்றாலீஸ்வரன் தலைமன்னார் அருகே கடலில் தனது சாதனையை நிலைநாட்டும் பொருட்டு கடலில் இறங்கினார். அந்நேரத்தில் அவர் சில பிரச்சினைகளை எதிர்நோக்கினார். வழிதவறி மேலதிகமாக 5 கிலோமீற்றர் தூரத்தை நீந்தி பின்னர் சர்வதேச கடல் எல்லையை அடைந்தபோதுகாலை 10.50 ஆகியது. இந்நிலையில் கடல் அமைதியாக இருந்தபோதும் தனுஷ்கோடி அருகே கடல் கொந்தளிப்பாக காணப்பட்டது. எனினும் திறமைமிக்க இவர் தனுஷ்கோடியைமாலை 5.10க்குசென்றடைந்தபோது வீரனுக்குரிய வரவேற்பு அங்கு காத்திருந்தது குற்றாலீஸ்வரன் முழுமையாக 37 கிலோமீற்றர் தூரத்தை 16 மணி நேரத்தில் கடந்திருந்தார்.

கரையில்இந்தியக்கொடியை தாங்கியபடி நடந்த குற்றாலீஸ்வரன் தனது அடுத்த இலக்கு ஆங்கிலக் கால்வாயைக் கடப்பதே என்றார்.

குற்றாலீஸ்வரன் பாடசாலைமட்டத்தில் பல கடல் போட்டிகளில் பங்குபற்றி நீச்சலில் சாதனை படைத்திருக்கின்றார் குஜராத்தில் நடந்த ஓர் போட்டியில் 20 கடல் மைல்தூரத்தை 10மணிநேரத்தில்நீந்திக் கடந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றாலீஸ்வரனை தமிழக விளையாட்டு அபிவிருத்தி அதிகார சபை கடந்த டிசம்பரில் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. அவருக்கு மாதாந்தம் 1000 ரூபாவும் வேறு பல வசதிகளும் பயிற்சியும் அளித்துவருகிறது.

தமக்கு வரமாக கிடைக்கப் பெற்ற குற்றாலீஸ்வரனின் பெற்றோர்கள் அவனின் இச்சாதனைகளால் பூரித்துப் போயுள்ளனர் 'எனது மகன் எதையாவது சாதிப்பதற்காக எத்தகைய இடர்களையும் சந்திக்கக் கூடியவாறு வளர்க்கப்பட்டுள்ளான் என்கிறார் பெருமிதத்துடன் அவரின் தாயார்.

தொகுப்பு:
துஷ்யந்தன்

# துயருடன் தனது இறுதிக் காலத்தைக் கழித்த முன்னாள் அமெரிக்க முதற்பெண்மணி ஜெக்குலின்கென்னடி

மலைப் பிரதேச பறவையினங்களின் கீச்சுக் கீச்சென்ற சத்தங்களுக்கு மத்தியில் நாலாபுறமும் பிரார்த்தனைக் கீதங்கள் ஒலிக்க ஜெக்குலின் கென்னடி ஒனாஸிஸின் பூதவுடல் அவரது முதல் கணவரான ஜோன் எப் கென்னடி சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நியூயார்க் லோங்ஐலண்டில் 1929 யூலை 28ஆம் திகதி ஜெக்குலின் பிறந்தார். குடும்பத்தில் மூத்தவர். உடன்பிறந்தவர் சங்கை மட்டுமே. இவரது தந்தை ஒரு வங்கி உரிமையாளர். பெயர் ஜோன் போவியர். தாயார் பெயர் ஜெனட். தந்தையின் பூர்வீகம் பிரான்ஸ். இதனால் ஜெக்குலினுக்கு பிரெஞ்சு நன்றாக எழுதப் பேசவரும்

ஜெக்கி படிப்பை முடித்துக் கொண்டதும் வாஷிங்டன் டைம்ஸ் ஹெரால்ட் பத்திரிகையின் புகைப்படச் செய்தியாளராக வேலைக்குச் சேர்ந்தார். கல்லூரியில் இவர் சமய வரலாறு மற்றும் ஷேக்ஸ்பியரை விருப்பப் பாடமாக எடுத்துக் கொண்டது தொழிலுக்குக் கைகொடுத்தது. பொதுவாகவே நல்ல அறிவாற்றல் கொண்டவராகத் திகழ்ந்தார்.

நிருபராக வேலை பார்த்த காலத்தில்தான் மசாசு செட் மாநில இளம் செனட்டரான ஜோன் கென்னடியை சந்திக்க நேர்ந்தது. பத்திரிகைப் பேட்டி சம்பந்தமாகத் தன் எதிர்காலக் கணவனை 1951ஆம் ஆண்டு இரவு விருந்தொன்றில் முதல் தடவையாக சந்தித்தார் ஜெக்குலின் இந்தச் சந்திப்புத்தான் அவர் வாழ்வை முற்றிலுமாக மாற்றி அமைத்தது.

ஜோன் கென்னடி ஓர் ஆணழகன் என்பதில் இரண்டாவது கருத்தே இல்லை. இதனால் ஏராளமான உயர்மட்டக் கன்னிகளின் கடைக்கண் வீச்சுகளுக்கு அவர் ஆளாகியிருந்தார். மேலும் இயல்பிலேயே கென்னடி காமப்பசி மிகுந்தவர். ஜெக்கியைத் திருமணம் செய்த பின்னரும்கூட மாற்றான் தோட்டங்களில் புகுந்து விளையாடுவதைக் கென்னடி கைவிடவில்லை, ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்த பின்னரும் கூட பேரழகி மர்லின் மன்றோவுடன் அவர் உறவு வைத்திருந்தார் என்பது வெளிப்படை.

ஆரம்பத்தில் இவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்ளும் வேளைகளில் அறிவுபூர்வமான விடயங்கள் பற்றி அலசுவார்கள் கென்னடி ஹார்வார்டில் படித்தவர். சிந்தனையாளர். நல்ல பேச்சாளரும் கூட. பொதுவாகவே அரசியல்வாதிக்கும் பத்திரிகை நிருபருக்கும் நெருக்கம் அதிகம் என்பதற்கு இவர்களும் உதாரணமானார்கள்.

கென்னடி ஒரு நிருபரிடம் மயங்குகின்றார் என்றால் ஜெக்குலின் சாதாரண கவர்ச்சிக்கு அப்பாற் சென்று கென்னடியின் ஆளுமையை அதாவது அவரது உண்மைச் சொரூபத்தை வசீகரித்தார் என்றுதான் கொள்ள வேண்டும். ஏனெனில் கென்னடி பல அழகிகளுடன் ஏற்கனவே நெருக்கமான உறவு கொண்டிருந்தவராவார் அவர்களிடையிலேயான காதல் அறிவுபூர்வமானதாகவே யிருந்து வந்துள்ளது.

இக்காலம் தான் ஜெக்குலினின் உண்மையான வசந்த காலம். கென்னடியும் தனது திருமணத்தை அப்படித்தான் கருதினார். இருவரும் நியூபோர்ட் நகரில் 1953ஆம் ஆண்டு மிக ஆடம்பர திருமணம் ஒன்றை நடாத்தி ஒன்றிணைந்தனர்.

திருமணமான ஏழாம் ஆண்டிலேயே அமெரிக்கவின் முதற் பெண்மணியானார் ஜெக்குலின் மூன்று ஆண்டுகளின் பின்னர் விதவையானார். வெள்ளை மாளிகை வாசம் முடிவிற்கு வந்தது. இருவரினதும் பத்தாண்டு கால வாழ்வில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

கென்னடியின் மறைவின் பின்னர் தான் விட்ட தவறுகளை எண்ணி அவர் வருத்தப்பட்டார். இறுதி வரை அந்த உணர்வு மன ஆழத்தில் அவரை உறுத்தி வந்திருக்க வேண்டும். வெள்ளை மாளிகை வாசத்தின் போது ஒரு தடவை ஜெக்குலின் ஜனாதிபதியான தன் கணவனை விட்டு விட்டு வெளிநாடு சென்றிருந்தார். இது

**சசிகரன்**

அவர்களது மரபிற்குகந்ததல்ல. இதனால் பத்திரிகைகள் காரசாரமாக செய்திகளை வெளியிடத் தொடங்கின.

கென்னடியின் இறுதிப்பயணமான டெக்சாஸ் விஜயத்தின் போது முதலில் அவருடன் செல்ல ஜெக்கி மறுத்துவிட்டாராம். பின் கென்னடியின் வற்புறுத்தலுக்கு மத்தியிலேயே இணங்கியுள்ளார். அந்தப் பயணத்தை மட்டும் அவர் மேற் கொண்டிருக்காவிட்டால் அந்தத் தவறு வாழ் நாள் பூராவும் அவரது மனதை தைத்திருக்கும் 1963 நவம்பரில் கொலைகாரர்களின் துப்பாக்கிக் குண்டுகள் தலையிலும் கழுத்திலும் பாய்ந்த நிலையில் கென்னடி தன் மனைவியின் தோளில் சாய்ந்தே உயிர் விட்டார். ஜெக்கியின் மீதான உலக அனுதாபம் இப்படுகொலையின் பின்னர் பல மடங்காக உயர்ந்தது

ஜெக்குலின் ஐந்து பிள்ளைகளுக்குத் தாயான போதிலும் கரோலின் என்ற மகளும் ஜோன் என்ற மகனுமேயுள்ளனர். 1954இல் பிறந்த முதல் குழந்தை பிறந்ததுமேஇறந்துவிட்டது. 56இல் பிறந்ததும் தங்கவில்லை. 63இல் பிறந்த ஆண்குழந்தைவாழ்ந்தது இரண்டரை தினங்கள் மட்டுமே.

தோல்விகள் இப்படித்தான் அவரை ஆட்கொள்ளத் தொடங்கின. 63இல் கென்னடி இறந்தார். கென்னடி குடும்பத்துக்கு மீண்டும் ஏற்றம் தரக்கூடியவராகக் கருதப்பட்ட ரொபர்ட் கென்னடி 1968 ம் ஆண்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் ஜெக்குலின் துவண்டு போனார்.

தான் உலக மக்களின் நேசத்தைப் பெற்றிருப்பதையும் மறுமணம் தன் மதிப்பை குறைக்கவே செய்யும் என்பதையும் ஜெக்குலின் நன்கறிந்திருந்த போதிலும் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் எப்போதும் ஆபத்து வரலாம் என்றும் தமக்கு பாதுகாப்பு ஒன்று தேவை என்றும் அவர் கருதியதால் ஏற்கனவே தன் தங்கையுடன் பழகிவந்தஅரிஸ்டாட்டில் ஒனாசிசுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்

பாதுகாப்புடனான அரவணைப்பை ஜெக்குலின் எதிர்பார்த்திருந்த அதேசமயம்பிரசித்தி பெற்ற ஒரு விதவையை அடைவது மூலம் உலகப்புகழ் பெறலாம் என ஒனாசிஸ் கணக்குப் போட்டிருந்தார். இந்த அடிப்படையில் தான் கிரேக்கச் கோடீசுவரர் ஒனாசிசும் ஜெக்குலினும் திருமணம் செய்து கொண்டனர். ஆக, காதல் மிகுந்து நடைபெற்ற திருமணம் அல்ல இது. சுயநல நோக்கங்களைக் கொண்டதே. இதனால் சிறிது காலத்திலேயே இருவரிடையேயும் பிரச்சினைகள் முளைவிடலாயின.

ஒனாசிஸ் ஜெக்குலின் எதிர்பார்த்த ஆடம்பர வாழ்வையும், பாதுகாப்பையும் அள்ளி வழங்கினார் பதிலுக்கு ஜெக்குலின் அவருக்கு உலகப்புகழைப் பெற்றுக்கொடுத்தார். இருந்தும் இருவரிடையேயும் ஒற்றுமை நீண்ட காலம் நிலைக்கவில்லை. விரக்தியுறும் நிலையில் ஒனாசிஸ் மரணமானார்.

இவரது மரணத்துடன் அவரது இரண்டாவது திருமண பந்தமும் முடிவுக்கு வந்தது. இதனால் துவண்டு போன ஜெக்கி தனிமையை நாடினார். நியூயார்க் நூல் வெளியீட்டகம் ஒன்றில் புத்தக எடிட்டர் ஆக தொடர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். இக்காலப் பகுதியில் மெரிஸ் டெம்பஸ் மேன் என்ற வைர வியாபாரியுடன் மட்டுமே அவர் நெருங்கிப்பழகினார் ஆனால் திருமணம் செய்து கொள்ளவில்லை அதனால்தான் இவர்களுக்கிடையிலான உறவு இவ்வளவு காலம் நீடித்ததாக பரவலாக பேசப்படுகின்றது. கடந்தமாத நடுப்பகுதியில் ஜெக்குலின் கொடிய புற்று நோய்க்கு இலக்காகி மருத்து வசிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவர் லிம்ஃபோமா எனப்படும் ஒருவகை புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். ஜெக்குலின் நிணநீர்த்தொகுதியிலேயே புற்று நோய் ஏற்பட்டிருந்தது. இதற்காக கதிரியக்க சிகிச்சையளிக்கப்பட்டது. ஏற்கனவே குடற்புண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த இவர் கடந்த நான்கு மாதங்களாக நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். இறுதியில் டாக்டர்கள் வேறு வழியில்லைஎன்று கைவிட்ட நிலையிலேயே கடந்த 18ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார். மறுநாள்அவர் மரணமானார்

இவரது பூதவுடல் கடந்த 25ஆம் திகதி ஆர்லிங்டன் தேசிய மயானத்தில் அவரது முதற்கணவரான ஜோன் எப் கென்னடி சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அமெரிக்காவின் 'அழகுச் சின்னம்' என்று ஒரு காலகட்டத்தில் யாவராலும் புகழப்பட்ட ஜெக்குலின் கென்னடி அமெரிக்காவில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் கௌரவமும் தனிஅந்தஸ்தும் பெற்றவராகத் திகழ்ந்தார். இவரது பெயரை உச்சரிக்காதவர்

(11 ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# அம்மாச்சி

சிறுகதை

- அருள் சுப்பிரமணியம்

'குறுக்கால போவானே' நகரமும் இல்லாத, கிராமத்திலும் சேராத, காடென்றும் கூற முடியாத 'மூன்றும் கெட்டான்' தனமான அந்த இடத்தில், ஒரு மதகில் நாடிக்குக் கை கொடுத்து இருந்து கொண்டு யாரோ முகம் தெரியாத ஒரு பெண்ணின் கூச்சலைக் கேட்பது தங்கவேலுவிற்கு சிறிது சங்கடமாயிருந்தது.

பஸ்ஸையும் காணவில்லை. நடப்பதென்றால்!

பள்ளமும் கல்லும் புழுதியும் சங்கமமான அந்த 'இரட்டை மாட்டுவண்டிப்பாதையில், ஏழு மைல்கள். நினைக்கவே களைப்பு வந்தது. அவனை நகரத்திலிருந்து சுமந்து வந்த பஸ் ஆற்றுக்கு அந்தப்பக்க ஆலமரத்து நிழலில் காத்திருந்தது. இனி- இந்தப் பக்கத்து பஸ் வந்து, ஆட்கள் வள்ளத்தில் ஆற்றைக் கடந்து ஏறிய பின்தான் அது போகும். அதுவரை டிரைவரும் கண்டக்டரும் தூங்கி வழியும் தேநீர்க் கடையில் அடிக்கடி 'பிளெயின் ரீ' அடிக்க வேண்டும். பீடி பிடிக்க வேண்டும். ஊர் நிலவரம் கதைக்கக்கூடக் கடைக்காரனை விட்டால் வேறு ஆளில்லை.

ஆறு அழகாய்த்தான் ஓடிக்கொண்டிருந்தது. இருகரைகளிலும் 'சல்வீனியாப்பச்சை' ஆற்றையே நோஞ்சானாக்கி விடும் அளவிற்கு ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறது. எதில் இல்லை பலாத்காரம் .. எங்கு இல்லைஆக்கிரமிப்பு. ஒன்றை மறைத்து இன்னொன்று உயர்வதும், ஒருவனை அழித்து இன்னொருவன் வளர்வதும் இயற்கையின் அடி நாதமே இதுதானா!

ஆற்றின் இந்தப்பக்கம் அனாவசியமாய் கற்கள் நிறைந்திருந்த இறக்கமான இடத்தை அண்டிய பகுதிதான் ஆற்றுப்படுகையின் துறைமுகம். மட்டிச் செதில்கள் பற்றிப்பிடித்திருந்த தூணொன்றில் கட்டியிருந்த கயிற்று நுனியில் பாசி பிடித்த வள்ளம் நீரோட்டத்தில் அசைந்தது. சுற்றிப் பிடித்திருந்த சல்வீனியாப் பச்சை தானும் அசைந்து வள்ளத்திற்குச் சாமரம் போடுவதுபோல நளினம் காட்டிற்று.

வள்ளக்காரனைக் காணவில்லை. நாரைக் கொக்கொன்று 'குக்கூ...குக்கூ..' வென நீருக்கு அணித்தாய் பறந்தது. மீன்கள் தலை காட்டினால் போதும் ஒரே கொத்து... ஒன்றை அழித்து இன்னொன்று

கிழக்கு வானில் சூரியன் ஏறஏற வெயில் இன்னும் கொளுத்தப்போகிறது. அதற்குள் பஸ் வந்துவிட்டால் போய்விடலாம். தங்கவேலு பஸ் வருகிறதாவென பார்த்தான். ஜீவனற்ற அந்தப் பாதையைப் பார்க்கையில் அது இப்போதைக்கு வராது என்றே தோன்றியது. நேரத்தைப் பார்த்தான். அதிகாலை ஐந்து மணிக்குப் புறப்பட்ட பயணம். இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமோ!

நகரத்திலிருந்து கிராமம் முழுவதுமே முப்பத்தியேழு மைல்தான். வழியில் எட்டு பரிசோதனைத்தரிப்பிடங்கள். டிரைவர் தூரத்திலேயே நிற்பாட்டி விடுவான்.

''ஐடென்ரி காட்டை' எடுத்துக் கொண்டு இறங்குங்கோ''...

கடந்த சில மாதங்களாய் அனுபவத்தில் முதிர்ந்து விட்டதால் ஒவ்வொரு இடத்திலும் கலவரமில்லாமல் வெகு இயல்பாய் சொல்வான் கண்டக்டர். பயணிகளுக்குத்தான் உளைவு தெரிந்தது.

ஐடீ காட்டி, விருப்பமில்லாமல் சிரித்து, வெளியே அள்ளிப்போட்டதுணிகளைப் பையில் திணித்து, இழுபட்டு ஏறி'இது நானிருந்த இடம்' என்று வாதிட்டு இருக்கையைக் காப்பாற்றி மீண்டும் இறங்கி ஐடீ காட்டி... ஒரு விதமாய் ஆற்றைக் கடந்து, மதகில் குந்தி நாடியில் கை வைக்க மணி எட்டாகிவிட்டது.

''குறுக்கால போவானே... இஞ்சவாடா.''

மீண்டும் அதே ஓலம்.

சே என்ன பெண் இவள்... யாரைக் கூப்பிடுகிறாள்?

இற்றுப்போன சில தகரத் துண்டுகளைக்கொண்டு தாறுமாறாய் கூரையிடப்பட்ட அந்தக்குடிசையிலிருந்துதான் சப்தம் வந்தது. முண்டு கொடுத்ததட்டியும், காலிமுட்டாசிப்போத்தல்களும் அந்தப் பக்கத்தில் அதுவே தேநீர்க் கடைஎன்பதைநிரூபணம்செய்தன. துறைமுகத்தில் இறங்கும் மக்கள் நடந்துநடந்து, புற்கள் நசிந்துநசிந்து அதுவே பாதையாகி முடியும் இடத்தில் இருந்தது குடிசை. வாங்கு என்ற பெயரில் துண்டாடிய காட்டு மரம் வாசலில் கிடந்தது. பக்கத்தில், பின்னால், எதிரே வேறு மனைகளே தென்படவில்லை. தங்கவேலு நாடியிலிருந்து கையை விடுவித்து, வளைந்த முதுகை நிமிர்த்தி சோம்பல் முறித்தான்.

அவனோடு பஸ்ஸில் வந்து வள்ளமேறி இந்தப் பக்கம் இறங்கிய நாலு பேரில் இருவர் நடையிலேயே போய்விட்டார்கள். மிஞ்சியவர் கூப்பிடு தொலைவில் தெருவோர இலந்தை மரத்திற்குக் கல்லெறிந்து கொண்டிருந்தார்கள். கடையில் வாடிக்கையாளரைக் காணவில்லை. இப்போதெல்லாம், ஜன நடமாட்டம் குறைந்துதான் போய்விட்டது. குடிசையுள்ளே மங்கிய வெளிச்சத்தில் ஒருசேலை நிழலாடியது. அசைவையும், குரலையும்வைத்து அப்பெண்ணுக்கு முப்பத்தைந்து வயது இருக்கும் என்று மட்டுக்கட்டினான் தங்கவேலு.

மரவாங்கிற்குப் பின்னால் நிழலுக்கு பச்சைப் பசேலென்று குடை விரித்த வேப்ப மரம். பக்கத்தில் அளவாகப் பிளந்து கட்டப்பட்ட காட்டுக் கொள்ளி விற்பனைக்குத் தயார். கடைக்குப் பின்னால் கையளவு தோட்டம். மொந்தன் வாழை பொத்தி தள்ளியிருந்தது. பூசணிப் பத்தையில் விரிந்த மஞ்சட் பூக்கள் சிரித்தன. சோளம் பாரந் தாங்காமல் சரியத் தொடங்கிவிட்டன. வரிச்சுத்தடி மேடையில் கல்லுக் கட்டிய புடலம் பிஞ்சுகள்...

அவளின் புருசன் சொந்தக் காலில் நின்று நேர்மையாக உழைக்கக் கூடியவனாகஇருக்கவேண்டும். அவன் கடைக்குள் இருப்பதாகத் தெரியவில்லை. வெள்ளனையோடு கொள்ளிவெட்டக் காட்டுக்குள் போயிருப்பான். மதியமோ, இரவோ வெட்டிய கொள்ளியோடு வந்து சேருவான்.

இவள் கடையைப் பார்த்துக் கொள்வாள். இடையிடையே பழஞ்சேலை சுற்றிக் கட்டிய மாதுளம் பிஞ்சுகள் முற்றிவிட்டதா என்று பிரித்துப் பார்த்துக்கொள்வாள். மரவள்ளிக் கிழங்கு பிடுங்குவாள். சமைத்தும் கொள்வாள்.

என்ன இருந்தாலும் பக்கத்தில் இனமும் இல்லாமல் சனமும் இல்லாமல், நானா நீயா போட்டிகள் இல்லாமல், தொலை தூரத்திலே தெரியும் கன்னி கழியாத காட்டை நம்பி, தங்கள் உடல் உழைப்பை நம்பி, பொத்தி தள்ளிய வாழையை கல்லுக் கட்டிய புடலையை நம்பி, கஞ்சியோ கூழோ குடித்துக் கொண்டு, தட்டத்தனியனாய்இப்படி வாழறதுஉசத்திதான் சுதந்திரம்தான். இருந்தால் உண்பார்கள் இல்லாவிட்டால் வயிறு காய்வார்கள் யாரையும் வஞ்சிப்பதில்லை. யாராலும் வஞ்சிக்கப்படுவதுமில்லை.

அவளதுபுருசனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. கொள்ளி கொத்துகிறவன் — தசைநாரெல்லாம் இறுகி கெட்ட நீரெல்லாம் வெளியேறிஆரோக்கியமாகத்தானிருப்பான். பீடி பிடிப்பானோ தெரியாது. தண்ணி ... உடம்பு அலுப்பிற்கு எப்போதாவது போடக்கூடும் வேறென்ன பொழுதுபோக்கு இவர்களுக்கு? ரீவியா. வீசீயாரா அவனுக்கு அவளும் அவளுக்கு அவனுமாகத்தான் பொழுது போக வேண்டும். இருட்டில் விட்டால் என்ன செய்வார்கள்? எப்படிச் சமாளிப்பார்கள்?

இருட்டு குடிசையைக் கவ்வி மூடிக்கொள்ளும். ஆற்றோரமிருந்து சீதளக் காற்று வீசும். தவளைக் கூட்டம் 'கவ்வா, கவ்வா' என இரவு முழுக்க இராகம் பாடும். இவர்களுக்கு இதெல்லாம் பழகிப்போயிருக்கும். ஒரு மண்ணெண்ணெய் விளக்கில், அது சிந்துகிற மங்கிய வெளிச்சத்தில், பிய்ந்த பாயில் ஒன்றாகப் படுத்து .. குழந்தைகள் இல்லையா?

''குறுக்கால போவானே... எங்கையடா தொலைஞ்சாய்?''

சே இதென்ன இழவு வீட்டில் பறையடிப்பது போல விட்டு விட்டுக் கத்துகிறாள். குறுக்கால் போவதென்றால் அர்த்தம் புரியாதாஇவளுக்கு. யாரைச் சாகச் சொல்லி திட்டித் தீர்க்கிறாள்... புருசனையா பிள்ளையையா... ஒருவரையும்காணவில்லையே!

அந்தப் பெயர் தெரியாத பெண்ணில் இப்போது அவனுக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. பேசிப்பேசியே இந்த அமங்கல வார்த்தைகள் பழகிப் போனதா? புருசன் இவளைக் கண்டிப்பதில்லை? என்ன ஜென்மம்!

'ட்ட்றூ ட்ட்றூ'

வாயால் கார் ஓடும் ஓசை பின்னாலிருந்து கேட்டுத்திரும்பினான் தங்கவேலு. சின்னப் பையன். பத்து வயதுக்கு மேலிருக்காது.. நண்டுக் குஞ்சொன்றை நூலில கட்டியிருந்தான். பொத்தான் இல்லாத காற்சட்டை அவிழ அவிழச் சொருகிக்கொண்டான். மெல்லிய வியர்வையும், புழுதியும் அவனது கறுப்போடு கலந்து வெயிலுக்கு ஜொலித்தது. ஓடும் ஆற்றில் அமிழ்த்திக் குளிப்பாட்டி எடுத்து, தலை சீவி பவுடர் போட்டுவிட்டால் வடிவாக இருப்பான். பார்த்தவுடன் பட்டென்று மனதைப் பற்றிக்கொள்ளும் 'காட்டுக்' களை.

இவன்தான் இவன்தான் அவள் அடிக்கடி கத்திக் கூப்பிடும் அந்த குறுக்

பையனின் கார்ச் சத்தம் கேட்டு 'பத்ரகாளி' வெளியே வந்தாள். முப்பது இருக்கும் கறுப்புத்தான். குரலும் தோற்றமும் ஒத்துப்போகவில்லை. இறுக இழைத்த கடகப் பெட்டி மாதிரி கட்டுக் குலையாத தேகம். ஆற்றிலே குளிப்பாட்டினால் இலட்சணமான பெண். கண்களுக்குக் கீழே கறுத்து, நாலைந்து நாள் நித்திரை விழித்தவள் போல் சோர்ந்திருந்தாள்.

''அம்மாச்சி இஞ்சர் நண்டுக் குஞ்சு''

அதைப் பிடிப்பதற்கு ஆற்றங் கரையோரத்தில் காலையில் இருந்து கடுமையாக உழைத்திருக்கிறான் அவன். அந்தப் பெருமிதம் முகத்தில் தெரிந்தது. குடிசைக்குள் ஓடினான். அவள் சப்தம் காட்டாது வேப்ப மரத்தில் கிளை முறித்தாள். கொப்புகளை உடைத்து, எறிந்து தயாரானாள்.

''அடி விழப்போகிறது'

ஒரு கையில் நண்டுக் குஞ்சு. மறுகையில் சுட்ட மரவள்ளிக் கிழங்கு. வாயில் ஒரு கடி. வெளியே வந்தான் பையன்.

''உனக்கு நான் எத்தினை தரம் சொன்னனான் ஆத்துப் பக்கம் போகாதை போகாதை யெண்டு. கொள்ளேல போவான்கள் கொண்டு போனா என்னடா செய்வாய்?''

கண் மண் தெரியாமல் அடித்த அடியில் வேப்பம் பிரம்பு சணல் சணலாய்ப் போயிற்று. அரைவாசி கடித்த கிழங்கு பற்றைக்குள் விழ நண்டு தப்பிப் பிழைத்து எங்கேயோ பதுங்கிற்று.

''இனிப்போவியா - போவியா-'

பிடி தளரவில்லை. அவனால் ஓட முடியவில்லை.

''போக மாட்டனம்மா... போகமாட்டனம்மா .. அடிக்காதை யம்மாச்சி அம்மாச்சி''

அடி விழ விழ, அவன் கால்களை மாறி மாறித் தூக்கினான். அவளுக்கு இன்னும் மனம் ஆறவில்லை. இழுத்துக் கொண்டே வேப்ப மரத் தடிக்குப் போனாள். கிளையை முறிக்க கைகளைத் தூக்கிய வேளை பார்த்து பையன்காணாமல்போனான்.

''டேய் ஓடாதை ஓடாதை... வந்திரு..'' கிளையை முறித்துக்கொண்டே கத்தினாள்.

பற்றைக்குள் விழுந்த மரவள்ளித் துண்டை எடுத்துக் கொண்டு ஓடினான் அவன். இனிப் பிடிக்க முடியாதென்ற துணிவு வந்ததும் நின்றான். கால்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்து வலித்த இடங்களில் தடவினான். கண்களைத் துடைத்து விட்டு மரவள்ளிக் கிழங்கிலும் ஒரு கடி கடித்தான். அவனது கண்கள் சுற்றுப் பற்றையை மேய்ந்தன.

''நண்டுக்குஞ்சு எங்கே ''

என்ன நினைத்தாளோ .. பிரம்பை எறிந்து விட்டு சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு உள்ளே போனாள்.

தங்கவேலுவின் திகைப்புத் தீரவில்லை நாகரீகம் முழுதாக எட்டிப் பார்த்திராத இது போன்ற இடத்தில் இதெல்லாம் நாளாந்த சகஜமோ என எண்ணினான்.

'இப்படியா ஒரு பிள்ளையைப் போட்டுக் கொல்லுகிறது. கடிச்ச கிழங்கை விழுங்கவும் விடாமல் ஆற்றுப் பக்கம் போனதற்கா இந்த அடி, அவனால் நம்ப முடியவில்லை.'

புருசனில் உள்ளகோபத்தை பிள்ளையில் தீர்க்கிறாளோ.. காரணம் தெரியாமல் இருப்புக் கொள்ளவில்லை. வெயிலும் அவனை இருக்கவிடவில்லை. எழுந்து நடந்தான்.

சற்றுக் கீழிறங்கினால் ஆற்றங்கரையோரம் ஈரத்தில் நடக்கலாம். தலை காட்டி மறையும் நண்டுக் குஞ்சுகளை ரசிக்கலாம். புளிய மரத்தடியில் தொங்கிப் பாயலாம். அவன் கீழிறங்கினான்.

அன்னை தன் செல்லக் குழந்தையை மாறி மாறி முத்தமிடுவது போல மெல்லிய அலைகள் வந்து கால்களைத் தழுவிச் சென்றன.

'இவள் முத்தம் கொடுக்க வேண்டாம். அணைத்துமகிழ வேண்டாம். அடிக்காமலிருந்தால் போதும். ஒருநாளைக்கு அடி தாங்காமல் கண் காணாது ஓடப்போகிறான் அதன் பிறகு யாரை அடிக்கப் போகிறாள்!'

அவனால் ஆற்றங் கரையின் ஈரத்தை, சலசலக்கும் நீரோட்டத்தை, நீரிலே பகலவன் மெல்ல மெல்ல விரித்துவிட்ட வெள்ளிப் போர்வையின் ஜொலிப்பை ரசிக்க முடியவில்லை. கண்ணீர் சிந்திய அந்தப் பிள்ளைதான் நெற்றியிலடித்தது போல் முன்னுக்கு வந்து நின்றான்.

அவன் திரும்பி மேலே நடக்கையில், கடை வாங்கில் பிள்ளை இருப்பது தெரிந்தது. அனுதாபம் உந்தித் தள்ள அவன் நடந்து பக்கத்தில் நெருங்கி அமர, மரியாதைக்கு பிள்ளை சற்று விலகினான்.

''இஞ்ச வாதம்பி '

பிள்ளையின் மூக்காலும் ஓடியது அவனுக்கு அருவருக்கத் தோன்றவில்லை. நெளிந்த அலுமினியக் கோப்பையில் புட்டும், ஆற்றுமீன் குழம்பும் சாப்பிட்டுக்கொண்டிருந்தான் அடி வாங்கியதையே மறந்து போயிருக்க வேண்டும்.

மேலெல்லாம் வரி வரியாய் வீங்கியிருந்தது. அதற்கு எண்ணெய் போட்டுத் தேய்த்திருந்தாள் தாய். முற்றி வெடித்த மாதுளம் பழமாக முதுகில் இரத்தம் கண்டியிருத்தது. கன்னத்தில் புழுதியோடு கலந்து காய்ந்துவிட்ட கண்ணீர் வரிகள்.

தங்கவேலு காற்சட்டைப் பையில் கை நுழைத்துத் துளாவினான். பிரயாணத்தில் மிஞ்சிய சில்லறை பத்து ரூபாக்கும் குறையாமல் இருக்க, அப்படியே பொத்தி நீட்டினான்.

பிள்ளை மூக்கை இழுத்துக் கொண்டு வேண்டாம் என்று தலையசைத்ததுமின்சதையை முள்ளிலிருந்து பிரித்து, புட்டோடு குழைப்பதில் கவனமாயிருந்தது வேண்டாமென்றது ஏமாற்றந்தான். ஏழையென்றாலும், யாரிடமும் கை நீட்டாமல் யாசகம் செய்யாமல ரோசமாய் வளர்த்திருக்கிறான் தகப்பன் சில்லறையை வாங்கில் வைத்துவிட்டு சாப்பிட்டு முடிக்கட்டும் எனக் காத்திருந்தான்.

''ராசா''

உள்ளிருந்து குரல் வர, பிள்ளை எழுந்து போனான். போன கையோடு திரும்பி வந்தான். தட்டில் புதிதாகப் புட்டும் பெரிதாக இரண்டு மீன் துண்டுகளும் தெரிந்தன. ஆவி பறக்க குழம்பு மணந்தது. சூட்டோடு அள்ளி அள்ளி விழுங்கினான். பற்றைப் பக்கம் பார்த்தான்.

''கைதவறிய நண்டுக்குஞ்சு என்னவாயிற்று!''

வெறும் கோப்பையைக் கொண்டு உள்ளே போனவன் சிறிது கழித்து சோளம் பொத்தியோடு வந்தான். முகம் துடைத்துத் தலை சீவியிருந்தது. அப்போதுதான் மினுக்கிய செம்பு போல பளிச்சென்று இருந்தான்.

''தம்பி, உன்ர பெயர் ராசாவா?''

''இல்லை.''

''அம்மா கூப்பிட்டாவே''

''அப்படித் தான் கூப்பிர்றவ''

'நேத்து என்ன சாப்பிட்டனீ?''

' சாப்பிடேல்லை ''

( 11ஆ பக்கம் பார்க்க )

# உலகின் மிகப் பெரும் கட்டுமானப் பணி; பிரிட்டன் - பிரான்ஸ் கடலடிச் சுரங்கப்பாதை

பிரிட்டனையும், பிரான்ஸ் நாட்டையும் இணைக்கும் வகையில் ஆங்கிலக் கால்வாய்க்குக் கீழாக 'ஈரோடனல்' எனும் கடல் வழிச்சுரங்கப் பாதை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பாவின் மிகப்பெரிய கட்டிடப் பணித் திட்டம் என்பதுடன் உலகிலேயே கடலுக்கடியில் கட்டப்பட்டுள்ளமிகநீளமானசுரங்கரயில் பாதையாகவும் அமைந்துள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ் பொறியியலாளர்களின் மனதில் 1802ஆம் ஆண்டு உதித்த இத் திட்டமானது சுமார் இருநூறு ஆண்டுகளின் பின்புதற்போதே செயல் வடிவம் பெற்றுள்ளது.

இத்திட்டம் குறித்த செய்தி வெளியானது முதல் பல உலக நாட்டு பொறியியலாளர்களும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மிகவும் பயங்கரமானதும், ஆபத்தானதும் என்பதுடன் நடைமுறைச் சாத்தியமற்ற ஓர் திட்டமெனவும் அவர்களால் வர்ணிக்கப்பட்டது. ஆயினும் இவ்விரு நாட்டுப் பொறியியலாளர்களும் தமது இத்திட்டம் குறித்து 1858இல் பிரிட்டிஷ் நாட்டின் பிரதமராகவிருந்த பமஸ்ரன் பிரபு (Lord Palmerston) விடம் விளக்கி அவரது அபிப்பிராயத்தை கேட்ட போது ஒரு குறுகிய தூரத்தை மேலும் குறுக்கும் திட்டம் எனக் குறிப்பிட்டு தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார் அவர். ஆயினும் இருநாட்டின் பொறியியலாளர்களும் தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் தீவிரகவனம் செலுத்தினர். பலத்த எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் இரு நாடுகளுக்குமிடையே சுரங்கரயில்பாதையை அமைக்கும் திட்டம் குறித்த ஒப்பந்தம் 'கைச்சாத்தானது.

இதன்படி பிரிட்டன் நாட்டின் ஷேக்ஸ்பியர்கிளிப் எனும் இடத்திலிருந்து பிரான்ஸ்நாட்டிலுள்ள சான் கேட் என்ற இடம் வரை மொத்தமுள்ள 50.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆங்கிலக் கால்வாய்க்கு கீழாக இப்பாதையை அமைப்பதெனவும் மொத்த வேலைத் திட்டத்தில் பாதியைபிரான்ஸ் தனதுதொழிலாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும் கொண்டு முடிப்பதெனவும் மிகுதியை பிரிட்டன் தனது வளங்களை பயன்படுத்தி பூர்த்தியாக்குவதெனவும் முடிவாகியது.

திட்டமிட்டபடி பிரான்ஸ் தனது வேலையை ஆரம்பித்தது. இதற்குள் ஒரு சுரங்கப் பாதை மட்டுமல்ல மொத்தமாக மூன்று சுரங்கப் பாதைகள் பிரிட்டன், பாரீஸ் நகரங்களுக்கிடையே ரயில் போக்குவரத்திற்கென கட்டப்பட்டுள்ளன. மைய சுரங்க ரயில் பாதையொன்றும் இதன்பக்கவாட்டிற்கு இரு சுரங்கரயில் பாதைகளுமாக இவை அமைந்துள்ளன. நடுவில் செல்லும் மைய சுரங்கப்பாதையின் அகலம் 7.6 மீட்டர். பக்கவாட்டில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுரங்கப்பாதைகளும் தலா 4.8 மீட்டர் அகலமும் உடையன. பக்கவாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள ரெயில்பாதைகளில் ஒன்றினூடாக ரெயில் போகவும் மற்றையதினூடாக வருவதற்கும் என அமைக்கப்பட்டுள்ளன. மையப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகண்ட ரெயில் பாதை அவசரதேவைகளுக்கும் பாதைகளில் ஏற்படும் பழுதுகளைத் திருத்துவதற்குமென திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

நீருக்கு அடியில் கடல்மட்டத்திலிருந்து சுமார் 150 அடி ஆழத்தில் அடர்த்தியான சுண்ணாம்புப் படைகளைக் குடைந்து நீரின் அழுத்தமோ, பூகம்ப அதிர்ச்சியோ தாக்காதவாறு இந்த நவீன சுரங்க ரயில் பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கடல் மட்டத்திலிருந்து சுரங்கம் வரை செல்ல விசேட ஊஞ்சல் அமைக்கப்பட்டுள்ளது இச்சுரங்கப் பாதையை அமைக்க மொத்தம் பதினொரு ராட்சத நீர் வெளியேற்றும் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதுடன்தினமும் 8500 தொழிலாளர்கள் இந்த சுரங்கம் அமைக்கும் பணியில் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஈடுபட்டனர். இந்த சுரங்கப்பாதையை அமைப்பதற்கு மட்டும் சுமார் 15 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதன் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையில் மொத்தம் மூன்று தண்டவாளப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத்தண்டவாளங்களில் செல்லும் ரெயில்கள் ஒன்றிலிருந்து இன்னொரு தண்டவாளத்திற்கு மாறிச் செல்லும் வகையிலும் இணைக்கப்பட்டுள்ளன.

இச்சுரங்கப்பாதையின் இருபக்க முனைகளிலும் ரெயில்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக மின்நிலையங்கள் உள்ளன. பயணிகள் ரெயில் பெட்டிகளையும் சரக்குரெயில் பெட்டிகளையும் இழுத்துச் செல்லும் என்ஜின் ஆறாயிரம் குதிரை சக்தியைக் கொண்டது. இது உலகிலுள்ள என்ஜின்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாகும்.

இச்சுரங்கப்பாதையில்விடப்படும் ரெயில்கள் மணிக்கு 160 மைல் வேகத்தில் செல்லவலலன கடலுக்கு அடியில் உள்ள சுரங்கப்பாதையைக் கடக்க 33 நிமிடங்களை எடுத்துக்கொள்ளும் வகையில் இது இயங்கவுள்ளது

நவீன முறையில் தயாரிக்கப்பட்ட மொத்தம் 38 ரெயில்கள் இந்த சுரங்கப்பாதைகளில் இயங்கவுள்ளன இவை ஒவ்வொன்றும் சுமார் 800 மீட்டர் நீளமானவையாகும் இவற்றின் பயணிகள் பெட்டிகள் அனைத்தும் பிரமிக்கத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன தீ அணைக்கும் வசதிகளும் தொலைபேசி மற்றும் வானொலித் தொலைத் தொடர்பு வசதிகளும்ஏற்படுத்தப்பட்டுள்ளன ரெயிலுக்குள் இருந்தவாறேபயணிகள வெளியிலுள்ள தமது உறவினர்களுடனோ அன்றி றேடியோக்காருடனோ தொடர்புகொண்டு வாகனவசதிகளை ஏற்படுத்த வசதியாகவே இவை அமைக்கப்பட்டுள்ளன சுமார் 375 மீற்றர்களுக்கு இவை வெளிப் பகுதியுடன் தொடர்புகளை ஏற்படுத்த கூடியளவிற்குவசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சரக்குரெயில்களில் கனரக எந்திரங்கள் வாகனங்கள், ரெயில் பெட்டிகள், கார்கள் போன்றவைவற்றை ஏற்றிச் செல்லக்கூடியதாக பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும்இத்திட்டம்2000-ம் ஆண்டளவிலேயே முற்று முழுதாக பூர்த்தியாகும் என தெரிவிக்கப்படுகின்ற போதிலும் கடந்தமாதம் 6-ம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது இதனை பிரிட்டிஸ் மகாராணி எலிசபெத்தும் பிரெஞ்சு அதிபர் மிட்டராண்டும் ஒரே நேரத்தில் திறந்துவைத்தனர்

தற்போது சரக்குரெயில்களே சேவையிலீடுபட்டுள்ளதாகவும் அடுத்த வருட முற்பகுதியிலிருந்தே பயணிகள் ரெயில் சேவை ஆரம்பிக்கபடவுள்ளதாகவும் பிரெஞ்சு அதிபர் தெரிவித்துள்ளார். இத்தாமதங்களுக்கு இருநாடுகளுக்குள்ளும் எழுந்துள்ள பலத்த எதிர்ப்புகளே காரணம் என தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் திட்டமிட்டபடி தனது வேலையை ஆரம்பித்து குறிப்பிட்டகாலத்திற்கு முன்னரே அந்த இலக்கினை அடைந்து விட்டபோதிலும் பிரிட்டன் தனது வேலைகளையே ஆரம்பிக்காது இருந்தது. பிரிட்டனிடம் நிலவிய நிதிப்பற்றாக்குறையே இதற்குகாரணம் எனத் தெரியவந்ததும் பிரான்ஸ் அவ்வேலையையும்தானே பொறுப்பெடுத்து சுரங்கம் தோண்டும் பணியைத் தனது தொழிலாளர்களைக் கொண்டேபூர்த்தியாக்கியது தொடர்ந்து மின்சார இணைப்புக்கள் வழங்கும் வேலையை பிரான்ஸ் முடித்தும் பிரிட்டன் ஆரம்பிக்கவில்லை அதனையும் பிரான்ஸே செய்துமுடித்து பாரிஸிலிருந்து சுரங்கப்பாதை வரையான ரெயில் பாதைகளையும்அமைத்து முடித்தபோதிலும் பிரிட்டன் அவ்வேலையை ஆரம்பிப்பதுகுறித்தே சிந்திக்காதுள்ளது அங்கிருந்து லண்டன் செல்லும் 68 கிலோ மீற்றர் தூரத்திற்கான புதிய ரெயில்பாதையை நவீனமயப் படுத்தும் வேலை இன்றுவரை ஆரம்பிக்கப்படாதுள்ளது

தற்போது இப்பாதைஅமைத்தது குறித்து பலத்த எதிர்ப்பினை அந்நாட்டு மக்கள் தெரிவித்துவருகின்றனர் இவ்வளவு பெருந்தொகையில் பணத்தை செலவிட்டு இப்பாதையை ஆரம்பித்துள்ள போதிலும் அதற்கேற்ற பலன் பிரிட்டன் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை எனவும் பிரிட்டனின் மொத்த சனத்தொகையில் 16 வீதத்தினரே வருடத்தில் பிரான்ஸிற்குச் சென்று வருவதாகவும் ஒருசாரார் தெரிவிக்கின்றனர் இப்பாதை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேற்று நாட்டார் பிரிட்டனுக்குள் பெருமளவில் புகுவர் இதனால் பிரிட்டனின் கலை கலாசாரங்கள் சீரழிவதுடன் பலவிதமானபுதிய புதியநோய்களும் நாட்டிற்குள் பரவும் எனவும் அச்சம் தெரிவிக்கின்றனர் அனேக பிரித்தானியர்கள பல ஐரோப்பிய துறைகளுக்குகடல பயணத்தில்சென்று பழக்கப்பட்டு விட்டபடியால் அவர்களில் 29 வீதமானோர் இதற்கு செலவிட்ட பணம் வீணானது என்கின்றனர் சமீபத்தில் லண்டன் முகவர்கள் மேற்கொண்ட கணிப்பீட்டின் போது 75 வீதமான பிரித்தானியர்கள் தாம் எப்பொழுதுமே இப்பாதையைப் பாவிப்பது குறித்து நம்பிக்கை தெரிவிக்கவில்லையாம் இதற்கிடையில் பிரான்ஸ் மக்களும் இதற்கு கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் விமானக் கட்டணத்திலும் பார்க்க இரண்டு மடங்கான தொகையினை பிரெஞ்சு அரசு அறவிட முடிவுசெய்துள்ளமையை வன்மையாகக் கண்டித்து வருகின்றனர். பாரிஸ், லண்டன் விமான சேவைக்கு 650பிராங் அறவிடப்படும் வேளையில் 'ஈரோடனல்' கடல் வழிச்சுரங்க ரெயில் கட்டணமாக 1300 பிராங்குகளை அறவிட திட்டமிட்டுள்ளதற்கே கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

**தொகுப்பு: சானா**

இவ்வாறான எதிர்ப்புகளும் கண்டனங்களும் எழுந்துள்ள போதிலும் இப்பயணிகள் சேவையானது ஆரம்பிக்கப்பட்டதும் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகச் சேவைகளை நடத்துபவர்களிடையே கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சேவையானது திருப்திகரமானமுறையிலும் திறமையாகவும் இயங்கும் பட்சத்தில் கடல்மார்க்கமாகச் செல்வோரில் 57 வீதத்தினரையும், ஆகாய மார்க்கமாகச் செல்வோரில் 75 வீதத்தினரையும் இதன் பால் ஈர்க்க முடியும் என பிரெஞ்சு அரசு நம்புகிறது.

---

**அவநம்பிக்கையின்**

எனவே இன்று எழுந்துள்ள கேள்வி என்னவென்றால் இவ்வுடன்பாடு பாலஸ்தீனிய தன்னாட்சியின் தொடக்கமா அல்லது அரபாத்தின் வீழ்ச்சியின் முடிவா அல்லது இசுரேலின் அடக்கு முறையின் முடிவா அல்லது பாலஸ்தீனிய போராட்டத்தின் புதியதொரு பரிமாணத்தின் தொடக்கமா என்பதேயாகும். இதற்கான விடையைநாம் காண பொறுத்திருக்க வேண்டும். என்றாலும் போராட்ட இலக்கில் மிகஉறுதியாக இருத்தல் என்பதை மிகதெளிவாக உணர்ந்துள்ள எம்மக்கள் அரபாத் எங்கே தவறுவிட்டார் என்பதை இலகுவில் புரிந்து கொள்வர்.


# கொழும்பு ஸ்ருடியோ

தொழில் நுட்பத்தில்
35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்

தரமான

- Line, Half-tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறின் Silk Screen
- Re-copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க,

**கொழும்பு ஸ்ருடியோ**

55, பணிக்கூட்டு வீதி (சி-9571) யாழ்ப்பாணம்,



## அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பிராந்தியத்தில் ஆண் | பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள திணைக்கள ஊழியர்களிற்கு 12 06-94 திகதி காலை 09-00 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பின்வரும் பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

தமிழ் மொழி — 2 மணித்தியாலம்
சுகாதார அறிவு — 1 மணித்தியாலம்

சம்பந்தப்பட்டோர் பரீட்சைக்குத் தோற்றுமாறும் அவர்களின் நிறுவனத் தலைவர்கள் அவர்களை பரீட்சைக்கு தோற்ற விடுவிக்குமாறும் வேண்டப்படுகிறார்கள்.

வைத்திய கலாநிதி க. ச. சிவகுரு,
பிராந்திய வைத்திய அதிகாரி,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
31 05-94

சுகாதார சேவைகள்,
மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி 9573)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# காமினிதிசாநாயக்காவிடம் ஜனாதிபதி டி. பி. எதிர்பார்ப்பது என்ன?

இவ்வருட இறுதியில் ஒக்டோபர் மாதத்திலோ அன்றி நவம்பர் மாதத்திலோ நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி டி பி விஜேதுங்கா காமினி திசாநாயக்காவை மலையென நம்பியுள்ளார் இவரின் இந்நம்பிக்கையே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்த பல எதிர்ப்புக்களின் மத்தியில் அவரைக் கட்சிக்குள் இணைத்துக் கொள்ள வைத்தது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனங்களின் வாக்குகளே தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் என அரசியல் விமர்சகர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களையும் முன்வைக்கின்றனர்

இம்முறை தேர்தல் களத்தில் ஐ.தே.க விற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கடும் போட்டி நிலவும் எனக் கணிப்பிடப்படுகின்றது. கடந்த 17 வருடங்களாக ஆட்சியில் உள்ள ஐ. தே. கட்சி தேர்தலில் அரச வளங்களை முற்றாகப் பயன் படுத்துவதோடு பெரும் சலுகைகளை அறிவித்தும் தனது கடந்த கால சாதனைப்பட்டியலையும் முன்வைத்தும் வாக்கு வேட்டையில் குதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

எதிர்க்கட்சிகளின் கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணி தெளிவான வரையறைகளுடன் கூடிய கொள்கையுடன் தென்மாகாண சபை தேர்தல் கொடுத்த வெற்றியின் ஊக்கத்துடனும் தேர்தலில் போட்டியிட உள்ளது அதற்கெனத் தற்பொழுதே தயாராகியும்வருகின்றது. இவ்வாற க இருகட்சிகளுக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் பட்சத்தில் சிங்கள மக்கள் மத்தியில் இன்றுள்ள நிலையின் பிரகாரம் வாக்குகள் சரிசமனாகப் பிரிவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவே கருதப்படுகின்றது.

ஆகையினால் மின்விற்ற பணம் நாறாது என்பதுபோல் விரும்பியோ விரும்பாமலோ சிறுபான்மையினரின் வாக்குகள் இவ்விரு கட்சிகளுக்கும் தேவைப்படுகின்றது. இத்தேவை இருவகையில் அவசியமாகின்றது. ஒன்று சமனாகப் பிரியும் சிங்கள வாக்குகளுடன் சிறுபான்மையினரின் வாக்குகள கிடைக்கப் பெற்றாலோ வெற்றி என்றநிலை, இரண்டாவது அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எவருக்கும் 51வீத வாக்குகள் தேவை என்ற விதி இந்நிலையில்அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினர் வாக்குகள் என்பது பிரதான சிங்கள கட்சிகள் இரண்டிற்கும் தவிர்க்கமுடியாத அவசியமானவையாகின்றது

இந்நிலையில் தான் சிறுபான்மையினர் தொடர்பாக தெளிவான ஒரு நிலைப்பாட்டை ஐ. தே. கட்சியும், சுதந்திரக் கட்சியும எடுக்க வேண்டிய நிலையை இன்றைய அரசியல் நிலை உருவாக்கியுள்ளது, இதில் வெற்றி பெறவே காமினி திசாநாயக்காவை ஜனாதிபதி டி பி விஜேதுங்கா பெரும் நம்பிக்கையுடன் கட்சிக்குள் கொண்டு வந்துள்ளதோடு. அவரின் கோரிக்கைகளையும் நிறைவேற்றி வருகின்றார்

காமினி திசாநாயக்காவிடம் டி பி விஜேதுங்கா இவ்வாறு நம்பிக்கை கொண்டு செயற்படுவதற்கு அவர் பௌத்த சிங்களவரிடம் பெற்றுள்ள செல்வாக்கோ அன்றி ஐ. தே கட்சிக்குள் அவர் பெற்றுள்ள செல்வாக்கோ காரணம் என்று கூறி விடமுடியாது! ஏனெனில், கடந்த மாகாணசபைத் தேர்தலில் காமினி திசாநாயக்காவின் செல்வாக்குப் பிராந்தியம்/ அரசியற்தளம் எனக் கருதப்பட்ட மத்திய மாகாணத்திலேயே மலையகத்தில் அவரால்பெரும்வெற்றியைப் பெறமுடியவில்லை, இதேசமயம் ஐ.தே.கட்சிக்குள் அவரைக் கொண்டுவரவும் பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கவும் டி, பி, விஜேதுங்கா எடுத்த முயற்சிகள் மிகவும் பெரியவையாகும், இந்நிலையில் பௌத்த சிங்களவரின் வாக்குகளை அள்ளிக்குவிக்கக் கூடியவராக காமினி திசாநாயக்காவை டி, பி, கருதி இருக்க முடியாது! ஐ. தே கட்சிக்குள்ளும் பேராதரவு பெற்றவர் எனவும் கூறி விட முடியாது: இதற்கு மாறான எண்ணத்தை டி. பி. கொண்டிருப்பாரே யானால், கடந்த கால தவறான அரசியற் கணிப்பீடுகள் போன்றே இதுவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை,

ஆனால் காமினியை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்து சக்திமிக்கவராக டி,பி, ஆக்கமுனைந்து வருவது சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியே ஆகும், இவ்வாறானதொரு முடிவிற்கு டி,பி, விஜேதுங்கா வருவதற்கு அண்மையில் காமினி திசாநாயக்காவிற்கும் தொண்டமானுக்கும் இடையில் இருந்த நெருக்கமான உறவும், கடந்த காலத்தில், இனப்பிரச்சினை தொடர்பாகக் காமினி கொண்டிருந்த நிலைப்பாடுமே காரணங்களாகும்;

காமினி திசாநாயக்காவிற்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கமானது எவற்றின் அடிப்படையிலானது என்பதில் கேள்விகள் பல இருக்கத்தான்செய்கின்றன, இவைஒரேபிரதேசத்து மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதினாலென்பதனாலா? அன்றி மத்திய மாகாணசபையில் காமினி திசாநாயக்காவை முதலமைச்சராக்கஉதவுவேன் எனத்தொண்டமான் கொடுத்த உறுதிமொழியும், அவ்வாறே செயற்பட முனைந்ததினாலா? அன்றி இருவரும் இந்திய சார்பு அரசியல்வாதிகள் என்பதினாலா?

இதில் காமினி தொண்டமான் உறவிற்கு எதுவும் காரணமாக இருக்கலாம், ஆனால் இவர்களின் உறவு தற்பொழுது நெருக்கமாக உள்ளது என்பது மட்டும் உண்மையே. இதனை வலியுறுத்துமாப் போலவே, மத்திய மாகாண சபை கலைப்பு முயற்சி தோல்வி கண்ட பின்னர் காமினிதிசாநாயக்கா ஐ,தே,கவுடன் இணைய முடிவு செய்த வேளையில், தொண்டமானுடனும் ஐ.தே.கட்சி நல்லுறவைப் பேண வேண்டும் என முன்வைத்த கோரிக்கை இருந்தது. இக்கோரிக்கையை ஐ தே க ஏற்றுக் கொண்டதோடு டி பி விஜேதுங்காவும், தொண்டமானும் பகைமை மறந்து கட்டித் தழுவியும் கொண்டனர். அத்தோடு மத்திய மாகாணசபை நெருக்கடியில் இருந்த போது உதவிய செல்லச்சாமி போன்றவர்களையும் ஐ.தே.க. கைவிட்டது-

இதேவேளை டி பி. விஜேதுங்கா காமினி திசாநாயக்காவிடம் இரு விடயங்களை எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது ஒன்று மலையகத்தில் உள்ள தமிழ்மக்களின் வாக்குகளைத் தொண்டமான் ஊடாகப் பெற்றுக் கொடுப்பது. மற்றையது, வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் வாக்குகளை ஏதோ ஒரு வழியில் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது, இவற்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது என்பதாகும்.

டி. பி. விஜேதுங்கா காமினி திசாநாயக்கா மூலமாக மேற்கொண்டுள்ள!மேற்கொள்ளும் இம்முயற்சியில் ஒரு விடயத்தில் கணிசமான அளவில் முன்னேறியுள்ளார் என்றே கொள்ள முடியும். அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பனவற்றில, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என்பதை இதுவரை வெளியிடாது விட்டாலும், பெரும்பாலும் ஐ. தே. கட்சியின் பக்கம் சார்ந்து இருப்பார் என்றே கொள்ளமுடியும்.

ஏனெனில், தனித்துவமாகத் தேர்தலில் போட்டியிடும் எண்ணங்கள் தொண்டமானிடம் இல்லாததோடு, டி. பி. விஜேதுங்கா முன்னர் தன்னைப் புறக்கணித்ததையும், ஓரம்கட்ட முனைந்ததையும் அவர் இப்பொழுது மறந்துவிட்டதாகவே தெரிகின்றது. மேலும் மலையகத்திலுள்ள இ.தொ.காவிற்கு எதிரான போக்குடைய தொழிற்சங்கங்களுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சுக்களைத் தொடங்கியதில் இருந்தும் இதனை ஓரளவு ஊகித்துக்கொள்ள முடியும்.

ஆனால் காமினி திசாநாயக்கா மூலம் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள ஐ.தே.க. மேற்கொள்ளும் முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றியைக் கொடுக்கும் என்பதே முக்கியமான கேள்வியாக எழுந்துள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தைப் பொறுத்து இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டையே கொண்டவர். ஆனால் இது அவருக்குத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தரும் என்று கூறுவதற்கில்லை. தற்பொழுதுஇருக்கும்நிலைமையே அது மேலும் மோசமாக்கக் கூடியதாகும்.

ஆனால், காமினி திசாநாயக்கா இவ்விவகாரத்தில் சற்று மாறுபாடான போக்குக் கொண்டவர். வடக்கு - கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினைதான் என்பதை ஏற்றுக் கொள்வதோடு, இதற்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் ஒப்புக் கொண்டவர். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் பலமானதொரு நிலையில் இருக்கும்போது அரசியல் பேரம் பேசுதலில் ஈடுபடக்கூடாது: அது தமக்குப் பாதிப்பானதாக அமையும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டவர்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் இரு வழிமுறைகளைக் கையாளலாம் எனக் காமினி திசாநாயக்கா கருதுவது போன்று அவரது நடவடிக்கைகள் உள்ளன ஒன்று இந்தியாவுடன் தமக்குள்ள நட்பைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த முற்படும் அதேவேளை தொண்டமானுடன் கூட்டாகக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்கு இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கைக்கு ஒத்ததாக, அதேசமயம் சற்று அதிகாரப் பரவலாக்கலை விரிவுபடுத்தக் கூடியதான தீர்வுத் திட்டத்தை முன் வைத்தலாகும்.

இதன் ஒரு கட்டமாகவே அமைச்சர் தொண்டமான் அண்மையில் இனப்பிரச்சினை தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைக் கொள்ள வேண்டியுள்ளது இச் சந்திப்பின்போது ஐதே கட்சியிடமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமும் கூட்டாக பிரச்சினை தீர்விற்கான யோசனை முன்வைக்க வேண்டும் என்றும் அதனை ஏற்றுக்கொள்பவர்களையே தேர்தலில் ஆதரிக்க வேண்டும் எனத் தொண்டமான் கோரியிருப்பினும், ஐதேகவுடன் தமிழ்க் குழுக்களைச் சமரசம் செய்து வைக்கும் முயற்சியே இதுவெனக் கொள்ள முடியும்.

இவ்விவகாரத்தில் அமைச்சர் தொண்டமான் மூந்திக் கொண்டு செயற்படுவதற்கு வேறு ஒரு சிலபலமானகாரணங்களும்உண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்விற்கான திட்டத்தைத் தாம் தயாரித்து வருவதாகவும், அது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்துள்ளது உத்தியோகப்பற்றற்ற ரீதியில் கிடைக்கப் பெறும் தகவலின்படி இத் தீர்வுத் திட்டத்தின் பிரகாரம் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் அமைப்பிற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி வருவதற்குத் தயாராக உள்ளதாகத் தெரிய வருகின்றது இதனை சிலசமயம் போக்கிடம் இன்றியிருக்குந் தமிழ் குழுக்கள் ஆதரிக்கவும் கூடும்.

இதேசமயம் முன்னாள் ஜனாதிபதிபிரேமதாசா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் டி பி விஜேதுங்காவினால் கைவிடப்பட்டிருந்தன சில கட்டுப்பாடுகளும் அவற்றின் மீது விதிக்கப்பட்டன இந்நிலையில் இக்குழுக்கள் டி பி விஜேதுங்கா மீது நம்பிக்கையும் இழந்திருந்தன இதனை வெளிக்காட்டுவது போன்று எதிர்காலத் தேர்தல்கள்குறித்து எதிர்த் தரப்பினருடன் பேச்சுவார்த்தையும் நடத்தியும் உள்ளன.

இதே சமயம் ஜனாதிபதித் தேர்தலில் குமார்பொன்னம்பலம் போன்றவர்களும் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர். கொழும்பில் வாழும் தமிழர்களின் செயற்பாட்டு குழு என்னும் புதிய அமைப்பும் டி பி, விஜேதுங்காவின் இனவாதப் போக்கை வெளிப்படையாக கண்டித்திருந்ததோடு தேர்தலில் சிறுபான்மையோர் வாக்குகளை இலகுவில் பெற்றுக் கொள்ள இடமளிக்கப் போவதில்லை எனவும் பகிரங்க அறிக்கை யொன்றையும் விடுத்துள்ளது.

இந்நிலையில் தான் அமைச்சர் தொண்டமான் விரைவில் செயற்பட்டு ஐ தே கவுடன் தனது பேரம் பேசுவதையும் அதேவேளை ஐ, தே, க வின் வெற்றி வாய்ப்பையும் உறுதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றே கொள்ள முடியும்.

ஆனால் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவது எப்படி என்பது தான் காமினி திசாநாயக்காவின் முன்னுள்ள முக்கியபிரச்சினையாகஉள்ளது அதாவது சிக்கலான இனப்பிரச்சினைக்கு ஒரு குறுகியகாலப்பகுதியில் தீர்வைக்கண்டு மக்களின்வாக்குகளைப்பெற்றுக்கொள்வது எப்படிஎன்பதே அதுவாகும்

காமினி திசாநாயக்கா இவ்விவகாரத்திலும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக முழுமையாக ஊர்ஜிதப்படுத்த முடியாத சில தகவல்கள் தெரிவிக்கின்றன-இதன் பிரகாரம் காமினிதிசாநாயக்கா பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்திய தரப்புடன் பேசியுள்ளதாக சில தகவல்கள் குறிப்பிடுகின்றன.இப்பேச்சுக்கள் அரசாங்க உயர் அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகள், மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

**ஜெயராஜ்**

இத் தகவல்கள் பூரணமாக உறுதிப்படுத்தப்படுமானால் காமினி திசாநாயக்காவின் சிந்தனை எவ்வழியில் செல்கின்றது என்பதை ஊகிக்க முடியும். இதேசமயம் சிறிலங்கா படைத்துறை அதிகாரிகளையும் காமினி சந்தித்துப் பேசியமையானது, காமினி திசாநாயக்கா இனப் பிரச்சினைத் தீர்விற்கு இராணுவத்தையும், அரசியல் தீர்வு குறித்த முயற்சிகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள விரும்புவதாகவே உணரமுடியும் இதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பையும் நேரடியாகவோ: மறைமுகமாகவோ பெற்றுக் கொள்ளவும் அவர் தயாராகவுள்ளார்.

ஆனால் டி. பி. விஜேதுங்கா காமினி திசாநாயக்கா மீது வைத்துள்ள நம்பிக்கையும், காமினி திசாநாயக்கா வடக்கு-கிழககில் வாக்குகளைப்பெற மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் எந்தளவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கவிற்கு உதவும் என்பதில் பலமான சந்தேகங்கள் உள்ளன-

காமினி-தொண்டமான் கூட்டால் மலையகத்தில் டி. பி. விஜேதுங்கா ஓரளவு நன்மை அடைய வாய்ப்புக்கள் இருக்கலாம். இதேசமயம் கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க் குழுக்களுடன் பேச்சு நடத்துவதனாலும் அவர்களுக்கு சில சலுகைகள் வழங்குவதாலும் சில நூறு வாக்குகளை சேர்க்கலாம்.

ஆனால், குறுகிய காலத்தில் சிக்கலாகிப் போய்விட்ட இனப்பிரச்சினையைத் தீர்க்கவோ அன்றி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுவிடுதலோ இயலாத காரியமாகும்- கடந்த காலத்தில் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலும் இவ்வாறான முயற்சிகள் தோல்வியிலே முடிவுற்றன-தேர்தலுக்காக நடாத்தப்படும் எந்த நாடகமும், தமிழ் மக்களை எப்பொழுதும் வெற்றிகொள்ளாது என்பதே இன்றுள்ள யதார்த்த நிலை. ஏனெனில் கடந்த காலத்தில இடம்பெற்ற தேர்தல்களின் மூலம் தமிழ் மக்கள் நிறையவே பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் டி பி விஜேதுங்காவின் குறிக்கோளை காமினியால் எவ்வாறும் நிறைவேற்ற முடியாது என்பதைத் துணிந்து கூறலாம்.

## இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தி நிலையத்தில் (குளப்பிட்டி)

## வேலை வாய்ப்புகள்

- மட்கல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை கிடையாது.
- உற்பத்திக்கான பயிற்சி இந்நிலையத்தில் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது ஊக்குவிப்பாக உதவுதொகை வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் நிலையத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் சுயமாக தொழில் செய்ய விரும்பின் அதற்கான முதலீட்டு உதவிகள் வழங்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

## "சக்திப்பகுதி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
அரசியல்துறை - தமிழீழ விடுதலைப்புலிகள்,

காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி.
தமிழீழம்.

(சி-9566)



## தேவை

வீடியோ டெக், தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற் செற் மற்றும் எலெக்ரோனிக் பொருட்கள் தேவை. நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகட்கு :

**மின்வளம்**

இல. 81, லெப். கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(சி-9575)



## அரசாங்க எழுதுநர் சேவை

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள
பொதுப் போட்டிப் பரீட்சைக்கான

## பயிற்சி வகுப்புகள்

செவ்வாய், வியாழன் தினங்களில்
3-30 — 5-30

**ஆரம்பம்: 09 - 06 - 1994**
மணி 3 - 30

பாடங்கள்:
மொழித்திறன், உளச்சார்பு

முழுக்கட்டணம் 200/-

- ★ பயிலுனர் ஆசிரியர் சேவை பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- ★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்.

**School of Business Administration**

16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-9581)



மக்கள் மனதில் மகிழ்ந்த

# 4-ம் ஆண்டு உதயமாகிறது!

# மின்வளம்

## இல. 81, லெப். கேணல் சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

எமது வளர்ச்சிக்கு ஆதரவு நல்கும் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

# எமது நல்வாழ்த்துக்கள்

- ★ தொலைக் காட்சி பெட்டிகள்
- ★ வீடியோ டெக், கசற்செற்
- ★ பொக்கற் றேடியோக்கள்

மற்றும்

- o சகல கைக்கடிகார வகைகள்
- o மணிக்கூட்டு பற்றரிகள், கைப்பட்டிகள்

உள்ளங்களை மகிழ்வூட்டும்

- ★ விடுதலைப் பாடல்களையும்
- ★ சினிமா திரைப்பட பாடல்களையும் சிறந்தமுறையில் COMPACT DISC மூலம் பதிவுசெய்து உடனுக்குடன் பெற்றிடுங்கள்

குறிப்பு!- வீடியோ கெற், சாஜ்ஜர் பற்றரிகள் விற்பனைக்குண்டு

(சி-9574)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# வீரப்பனை கைது செய்ய புதிய அமைப்பு உருவாகியது

சந்தன மரக் கடத்தல்காரரான வீரப்பனையும் அவனது குழுவினரையும் கைது செய்வதற்கென புதியதொரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத் தகவலை கர்நாடக அரசின் வனத்துறை அமைச்சர் மைசூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அண்மையில் சென்னையில் காவல்துறை உயர் அதிகாரிகளிடம் இதுதொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் அதனைத் தொடர்ந்து இப் புதிய அமைப்பு உருவாக்கப்படுவதாகவும் இது பற்றிய விபரங்கள் பின்னர் வெளியிடப்படுமெனவும் குறிப்பிட்டார்.

# தென்னாசிய ஒலிபரப்புக்கு இந்தியாவின் அலைவரிசை

### தூத்துக்குடியில் ஆரம்பம்

(சென்னை)

துறைமுகநகரான தூத்துக்குடியில் 200 கிலோ வாட் சக்தி கொண்ட இந்திய வானொலியின் வெளிநாட்டு சேவைப்பிரிவு வானொலி நிலையம் சில தினங்களுக்கு முன் செயற்பட ஆரம்பித்துள்ளது.

எட்டரைக்கோடிரூபா செலவில் கட்டப்பட்ட இந்நிலையம் காலை மூன்றரை மணி நேரமும் மாலை ஐந்தரை மணி நேரமும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும். இந்நிகழ்ச்சிகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் ஒலிபரப்பப்படும்

தென் கிழக்காசிய தமிழர்களுக்கும் குறிப்பாக இலங்கைத் தமிழர்களுக்கு இந் நிலையம்சிறப்பு நிகழ்ச்சிகளை அளிக்கும் எனவும் தமிழகத்தின் தென்மாவட்டங்கள் உட்பட 61 லட்சம் பேர் இந்த நிகழ்ச்சிகளை செவிமடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மேலும் 261 பொலிசாருக்கு பதவி உயர்வு கிடைத்தது

சிறிலங்கா பொலிஸ் பிரிவில் மேலும் 261 பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் தமது பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதினொன்று, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தரத்தில் நாற்பத்தி ஐந்து, உதவிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எண்பத்தி ஒன்பது மற்றும் சகல தரப்பினையும் சேர்ந்த அதிகாரிகளாக நூற்றி பதினாறு பேர்கள் பதவி உயர்வுவைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் அனேகர் கிழக்கு மாகாணத்திலும் வடக்கே இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திலும் நியமனம் செய்யப்பட இருப்பதாக பொலிஸ் தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அபமாச்சி

''ஏன்?''

''மூண்டு நாளா அம்மா சமைக்கேலை.''

''ஏன் சமைக்கேலை?''

காலில் ஊர்ந்த கட்டெறும்பைத் தட்டிவிட்டுக் கொண்டிருந்தான்.

''ஆத்தோரம் போனா, தண்ணி இழுத்திருமல்லா ஏன் போய் வீணா அடி வாங்கிறாய்?''

''தண்ணி இழுக்காது. வத்து நேரத்தில அப்புச்சியோட மீன் பிடிக்கிறனான்.'

''அப்ப அம்மா ஏன் அடிச்சவ?''

பிள்ளை சோளம் பொத்தியில் அழுத்திக் கடித்தது.

''இப்படித்தானா ஒவ்வொரு நாளும் அடிக்கிறவ?''

அடுத்த கடியும் தொடர்ந்தது'

''உங்கடஅப்புச்சி எங்கே?'

'‘தெரியா.''

'என்ன தெரியா?''

'அப்புச்சி எங்கையெண்டு தெரியா''... என்றவன் சோளம் தண்டிலிருந்து உப்பை உறிஞ்சினான்.

''அப்புச்சி வேலைக்காக போயிற்றார்.'

'இல்லை'

'அப்ப'

அப்புச்சியைக் கூட்டிக் கொண்டு போயிற்றாங்கள்'

'ஆர்?'

துடையில் இலையான் மொய்க்க, சோளம் பொத்தியால் விசுக்கினான்.

'ஆர் கொண்டு போனவங்கள்?''

''ஆத்துக்கு அந்தப் பக்கம் அப்புச்சியைக் கொண்டு போய் வெயிலில் வைச்சு துவக்குப் பிடியால அடிச்சவங்கள்?''

'ஏன்?'

போன கிழமை ராத்திரி ஒரு அண்ணன் பசி எண்டு வந்தவர் அப்புச்சி சாப்பாடு போட்டுக் குடுத்தவர்.''

'ஆர் அண்ணன்?'

'எங்களுக்குத் தெரியா'

'அப்புச்சியை எப்ப கொண்டு போனவங்கள்''

'பிள்ளை விரலை மடக்கிற்று. 'ஒண்டு... ரெண்டு... மூன்று... நாலுநாள்'

கடவுளே ... திரும்பி வருவானா?

அப்பெல்லாம் உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார் என்பார்களே - இப்ப ... இப்படியா!

கடவுளே.... திரும்பி வருவானா?

பசியென்று வந்தவனுக்கு உணவளித்த மனித நேயம் உள்ள ஏழைக்கா இந்த கதி!

தகப்பனுக்கு நான்கு நாட்களாய் என்ன நடந்தது என்று கூடச் சரியாகத் தெரியாமல் சோளம்பொத்தியைஉறிஞ்சிக் கொண்டிருக்கும் அந்தப் பிள்ளையைப் பார்க்கையில் தங்கவேலுவின் இதயத்தைப் பொத்தி இறுக்கியது போல என்னவோ செய்தது.

அந்த நேரத்தில் பஸ் வந்திருக்கவே வேண்டாம் உடைந்து கொட்டுப் படுவதுபோல் சத்தமிட்டு வந்த பஸ் உறுமித் திரும்பி உடனேயே புறப்படத் தயாரானது.

''அப்பு ஆத்துப் பக்கம் போகாதை... என்ன ... அம்மாட சொல்லைக் கேள்...... என்ன''

நாடியைத் தடவிவிட்டு தங்கவேலு பஸ் ஏறினான். வழிந்த கண்ணீரை மறைத்துத் துடைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

பிள்ளை பற்றைக்குள் நண்டைத் தேடிக் கொண்டிருந்தான். வாங்கிலில்வைத்த சில்லறை அப்படியே இருந்தது.

''டேய் ராசா... கொள்ளேல போவானே... பேந்தும் போயிற்றியாடா,''

மீண்டும் தாயின் ஓலம்- ஓலமா அது - இல்லை தன் பிள்ளையை யென்றாலும் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கும் தாயின் ஆவேசம்-

தாயே - நீ எப்படியென்றாலும் உன் பிள்ளையைக் கூப்பிடம்மா - ஆனால்...... பசி எண்டு வந்தா... யாருக்கும் சாப்பாடு போட்டிராதை...

நன்றி இந்தியா டுடே

# சீதனம் என்பது சிறுமை- அந்தச் சிறுமையை ஒழிப்பது பெருமை

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வடமராட்சி வலிகாமம் பகுதிக் குடியிருப்புகள் மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து அகோர ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பலாலி முகாமிலிருந்து நேற்று முன் தினம் மாலை 6.30 மணியிலிருந்து நேற்று பகலும் ஆட்லறி ஷெல்வீச்சுக்கள் தொடர்ந்த வண்ணமிருந்தன.

வடமராட்சிநோக்கி நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் வீசப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று தொண்டமானாறு பகுதியில் பெரும்சத்தத்துடன் வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியில் உள்ள பாமினி லொறி உரிமையாளர் சூரன்- இராசு என்பவரது வீடு,சுற்று மதில் சேதமடைந்தது. வீட்டில் இருந்தோர் மயிரிழையில் தப்பிக்கொண்டனர் (யோ)

## புதிய இராணுவ

குளள சனசமூக நிலையக் கட்டடத்திலும் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரே அங்கிருந்து வெளியேறி இப் புதிய முகாமை அமைத்துள்ளனர்.

## அரசசார்பற்ற

குககாக ஒரு அரசாங்க சார்பற்ற நிறுவனத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் இதன் மூலம் அரசாங்க சார்பற்ற நிறுவனம் எவ்வாறு சுயமாக இயங்க முடியும் என்ற சர்ச்சை இப்போது அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் நிலவுகின்றது.

## ஊனமுற்றோர்

30 லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் ஏதாவது வேலை செய்ய விரும்புகின்றனர் ஆனால் சாதாரணமக்களைப் போல் அவர்களும் பணியாற்ற அவர்களுக்கேற்ற தொழில் நுட்ப உதவிகளைச் செய்து தரவேண்டியது நமது கடமையாகும் என்று பில்சால்யர்ஸ் கூறுகிறார் எந்தவித ஆரவாரமும் இல்லாமல் அமைதியாக அந்தப் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுவருகிறார் அவர்.

விஸ்கான்சின் மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதி ஒருவர் நரம்புக் கோளாறினால் பாதிக்கப்பட்டு அதிகமாக எழுத முடியாத நிலையில் இருந்தார் அவருக்கேற்ற கணனியொன்றை சால்யர்ஸ் உருவாக்கிக் கொடுத்தார்

அதேபோல ஜர்ஜியாவைச் சேர்ந்த பார்வையற்ற ஒருவர் பங்குச் சந்தையில் வெற்றிகரமாகப் பணிபுரிவதற்கு அவரிடமுள்ள விசேட கணனிதான் உதவுகிறது குரல்மூலம் பிறப்பிக்கப்படும் கட்டளைகளை ஏற்று அதற்கேற்ற முறையில் இயங்கும் கணனி அது மேலும் அமெரிக்க வானிலை ஆராய்ச்சித் துறையில் பணியாற்றும் ஹெர்ப் ஹொங்மன் என்பவர் முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறார். இருப்பினும் தமது குதிக்காலால் இயக்கக் கூடிய கணனியைப் பயன்படுத்தி இவர் தமது பணியை வழக்கம் போல் செய்து வருகிறார்

ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவக்கூடிய தொழில் நுட்பங்களையும் பீல் சால்யர்ஸ் தயாரித்துக் கொடுக்கிறார் முதுகுத் தண்டு மோசமாகப் பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவன் மற்றமாணவர்களைப் போல சகஜமாகக் கல்லூரிக்குச் சென்று படிப்பதற்கேற்றதொழில் நுட்பம்ஒன்றையும் அவர் உருவாக்கிக் கொடுத்துள்ளார்

- அமெரிக்க தகவல்மையம்

# பாடசாலை அழகு ராணி போட்டியை தடை செய்க

### மாகாண சபையில் பிரேரணை

சப்பிரகமுவ மாகாண பாடசாலை மாணவிகள் அழகு ராணிப் போட்டிகளில் கலந்து கொள்வதை உடனடியாக தடுக்க வேண்டும் என்ற பிரேரணை யொன்றுக்கு சப்பிரகமுவ மாகாண சபையில் முன்னறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி பிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்துள்ளார். எல்பிட்டியவில் 6 வயது குழந்தை அழகு ராணி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் யட்டு கொல்லப்பட்டதை வன்மையாக கண்டித்து உள்ளதுடன் இதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகள் அழகு ராணிப் போட்டிகளில் பங்குபற்றுவதை சப்பிரகமுவ மாகாண சபை தடுக்க வேண்டும். அத்துடன் குழந்தைகள் அழகு ராணி, குழந்தை மணமக்கள், மற்றும் அழகுராணிப்போட்டிகளை பாடசாலைகளில் நடத்துவதை தடைசெய்யும் தீர்மானமொன்றை கொண்டுவர வேண்டும் என அப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

## மெய்வன்மை போட்டிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை கல்விக் கோட்ட மட்டத்திலான மெய்வன்மை இறுதிப் போட்டிகள் இன்றும், எதிர்வரும் 6ஆம் திகதியும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(யோ)

## கலந்துரையாடல்

உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 05ம் திகதி காலை 10 00 மணிக்கு யாழ் மாவட்ட, அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட தெ. ப. வ. உ. வி. கூ. சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 05ம் திகதி காலை11.30 மணிக்கு யாழ்மாவட்ட, அரசியல்துறைசெயலகத்தில் நடைபெறவுள்ளது-

வலிகாமக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 05ம் திகதி பி.ப 3 00 மணிக்கு அரசியல்துறை யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது

இவற்றில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்-

## துயருடன்

களே இல்லை என்று கூறினால் அது மிகையாகாது.

அந்தளவு கவர்ச்சி ஜெக்குலினின் சகல நடவடிக்கைகளிலுமே காணப்பட்டது ஜெக்குலின் தனது இளமைப் பருவத்தில் எந்தளவு மகிழ்ச்சியாக வாழ்ந்தாரோ அதேயளவு துன்பத்தையும் அவர் சந்திக்கத் தவறவில்லை.

உலக புகழ் பெற்ற அந்தப் பெண்மணி இன்று மறைந்து விட்டார். அவர் முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் விதவை மனைவியாக உயிர் துறந்திருந்தால் அமெரிக்க மக்களின் அனுதாப அலை பீறிட்டு புரண்டிருப்பது நிச்சயம். ஏனெனில்கென்னடிஎன்ற பெயருக்கு அப்படி ஒரு மதிப்பு நிலவிவருகிறது. ஆனால் பெண்களைப் பகடைக்காய்களாய் பாவித்த ஒரு கோடீஸ்வரனின் மனைவிகளில் ஒருவராக தன்னை ஆக்கிக்கொண்டது அவரது அந்தஸ்துக்கு குந்தகம்விளைவித்துவிட்டது தன் தோல்விகளையும் வேதனைகளையும் துடைத்திட அவர் எடுத்த முடிவுகளால் அவருக்கு தற்போது கிடைத்தது மேலும் தோல்விகளும் வேதனைகளும்தான். ஏனெனில் அவர் மரணத்தில் பங்கெடுத்தவர்கள் உறவினர்களும் நண்பர்களும்மட்டுமே.

## அரசுக்கெதிராக

என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

செய்தித்தாள்கள் அரசுக்கெதிராகச் செய்திகளை வெளியிட்டாலும் பத்திரிகைச் சுதந்திரத்தில் தான் தலையீடு செய்யப்போவதில்லை என்றும் அவர் உறுதி வழங்கினார்

இது குறித்து பி. பி. ஸி கருத்து தெரிவிக்கையில் கடந்த காலத்தில் பத்திரிகைகள் மீதான அரசின் கட்டுப்பாடுகள் கடுமையானவையாக இருந்தன பத்திரிகையாளர்கள் ஆபத்துக்குள்ளாகி இருந்தனர்

இப்போதும் செய்தித் தாள்கள் மீதும் தனியார் வானொலிகள் மீதும் தொலைக்காட்சிகள் மீதும் மறைமுகமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. பி. பி. ஸியின் உலகசேவை நிகழ்ச்சிகளில் இலங்கை பற்றிய விபரங்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகிறது என குறிப்பிட்டது.

## எதிரணி

னரே இணக்கம் காணாவிட்டால் அவை தப்பபிப்பிராயங்களிற்கு வழிகோலுவதாகவே அமையும்-

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் மாவட்ட உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் மாவட்டத் தலைவர்கள் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் லலித் முன்னணி என அழைக்கப்படும் ஒரு தனியான அரசியல் முன்னணிக்குத் தலைமை தாங்கும்படி என்னை அழைக்கின்றனர்- லலித் அத்துலத்முதலியின் பல ஆதரவாளர்கள் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயற் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்திருக்கிறது-

காமினி திசாநாயக்காவின் நெருங்கிய ஆதரவாளர்கள் இந்த செயற்குழுக்குள் இணைக்கப்பட்டுள்ளனர்- இதனை ஐ தே. க. வுடன் இணைத்துவிடும் ஒரு முயற்சியாகவே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது- இலங்கை மக்களை முட்டாள்கள் ஆக்கிவிட முடியாது என நாம் நம்புகிறோம் அவர்கள் அரசியல் ரீதியாக முதிர்ச்சியடைந்துள்ளார்கள்- காமினியோ அல்லது கட்சியின் தலைவரி எனக் கூறிக்கொள்பவர்களோ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து விட்டார்கள் எனக் கூறி வாக்காளர்களை இணங்கச் செய்ய முடியாது என்றார்-

## சாரதா

கலை இலக்கிய சஞ்சிகை

அடுத்த இதழ் இலங்கைச் சிறப்பிதழ்

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன்

**வசந்தம், தமிழ்த்தாய், பூபாலசிங்கம்**

**புத்தக கடைகளில் விற்பனையாகிறது**

(8456)





## இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிப்பான செய்தி!

நாளை சனிக்கிழமை (4-6-94) மட்டும் 450 g போத்தல் JAM இன் விலை ரூபா 50/- மட்டுமே. இந்த சலுகையை பெற நீங்கள் செய்ய வேண்டியது இதுவே.

நாளை காலை 9 மணிக்கும் மாலை 3 மணிக்கு மிடையில் 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் ஒரு வெற்று JAM போத்தலை ஒப்படைத்து ரூபா 50/- ற்கு ஒரு போத்தல் JAM ஐ கொள்வனவு செய்து ரூபா 10/- ஐ சேமியுங்கள். இச் சலுகை நாளை மட்டுமே: சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD
NO 14, Seenier Lane, Jaffna.

(சி 9382)



## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் 5

மாணவர் வலுதான் ஆற்றல் மிகு வலு
எம் அறிவும் ஆற்றலும் அன்னை நாட்டுக்கே.

யா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

கரவெட்டி கல்விக் கோட்டம்

(8460)



## மாணவர் எழுச்சி தினம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 5-6-94 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மாணவர் எழுச்சி தினத்தையொட்டி தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று (3-6-94) கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி -பதில் அதிபர்

(சி-9590)



## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் - 5

மாணவர் வலுதான் ஆற்றல் மிகு வலு
எம்அறிவும் ஆற்றலும் அன்னை நாட்டிற்கே.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
(8458) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் - 5

சிங்களம் எங்களைத் தரைமீது கிடத்தும்
எங்களின் கல்வியோ வரலாறு படைக்கும்.

யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
(8459) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்


## ஹெலிநோட்டம்

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று காலை 9.05 மணியளவில் பொன்னாலை சுழிபுரம், தொல்புரம், சித்தன்கேணிப் பகுதிகளின் வான்பரப்பில் தாழப்பறந்து வட்டமிட்டுச் சென்றது. இந்த உலங்கு வானூர்தி சுழிபுரம் பகுதியின் கரையோரப் பகுதியையும், அதனை அண்மித்த மக்கள் குடியிருப்புக்களையும் நோட்டம் இட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது (41)

## கலந்துரையாடல்

வங்கி அமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினர் சகல சி.க.கூ. சங்க நிர்வாகிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

வலிகாமம் பகுதியிலுள்ள சி.க.கூ. சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் இம் மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கோண்டாவில் செயலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் வலிகாமம் பகுதியிலுள்ள சகல சி.க.கூ. சங்க நிர்வாகிகளையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

ஃ ஃ

புலிகளின்குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் நடைபெறும். அனைத்து வானொலிக் கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கத்தினதும், வலைப்பந்தாட்ட நடுவர் சங்கத்தினதும் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சென். சாள்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் நடப்பு ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும். பதிவு செய்யப்பட்ட கழகங்களிலிருந்து இரு பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். புதிதாகப் பதிவு செய்ய விரும்பும் கழகங்களும் அன்றைய தினம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும். அவைகளும் இரு பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் கேட்டுக்கொள்கின்றது


யாழ் ஸ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
**GAME OF DEATH**
தினசரி பி.ப. 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி
பி.ப. 4 மணி, 6 மணி
தினசரி பி.ப. 2.30 மணி காட்சி மட்டும்
ஏப்ரல் 94
ஒளிவீச்சு

(சி-9570)



## BECON

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**தமிழ் திருமதி மீரா**

4-6-94 சனி முதல்
A/L வகுப்புக்கள்
வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்,

(சி 9591)


# தேர்தல் முறையில் மாற்றம் விரைவில் ஏற்படாது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசு தற்போதைய தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான பல யோசனைகளை முன் வைத்தது ஆனால் தெற்கில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அது பற்றி எதுவும் கூறுவதில்லை அதனால் எதிர்வரும் தேர்தலின் போது தேர்தல் முறை மாற்றப்படும் எனக் கருதமுடியாது இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் கண்டி மாவட்ட அமைப்பாளருமான சி. என் ஜெயரட்ண தெரிவித்தார்

எதிர்வரும் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியே வெல்லும் என்று பொதுமக்கள் மத்தியில் கருத்து உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்

### நெடுங்கேணி கோட்டத்தில்

# இரண்டு பாடசாலைகளுக்கு அரசாங்கம் மூடுவிழா

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணிக் கல்விக் கோட்டத்திலுள்ள இரண்டு பாடசாலைகளை சிறிலங்கா அரசு மூடியுள்ளது

இதனால் பல மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது மூடப்பட்ட இரண்டு பாடசாலைகளிலும் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டுள்ளது. இப் பற்றாக்குறை தொடர்பாக மாணவர்களினாலும் பெற்றோர்களினாலும் கல்வி அதிகாரிகளுக்கு பலமுறை சுட்டிக்காட்டப்பட்டன. ஆனாலும் ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

தற்சமயம் இவ் இரண்டு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதாக சிறிலங்கா கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை நெடுங்கேணிக் கோட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 6 3 வெள்ளி இரவு**

8.01-கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''நங்கை'' மாதாந்த சஞ்சிகையின் 10 வது இதழ் அடுத்து-சிறுகதை ''வெளிச்சம்'' அதனையடுத்து-கவிதை ''இரத்தக் கனிகள்''
8.30- செய்திகள்
8.40-அரசியல் அரங்கம் ''ஆபிரிக்க கண்டத்தில் ஒரு மயான காண்டம்''
8.50-வாத்திய கானங்கள்

**1994-6-4 சனி காலை**

7.02- மாவீரவணக்கம்
7.15 - நீங்கள் கேட்டவை
7.30 - செய்திகள்
7.35 - பத்திரிகைச் செய்திகள்
7.40 - நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி

### மக்களுக்கு

சோதகர் நேற்று முன்தினம் இதனைக் கண்டுபிடித்தார். இந்த உற்பத்தி நிலையத்தில் இருந்து 163 குளிர்பானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப் பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன. (86)


## கண்ணீர் அஞ்சலி

**கந்தையா கருணாகரன்**

(பலகாடு, காரைநகர்)

திருநெல்வேலி, சுகன்யா றேடர்ஸ் ஸ்தாபனத்தின் ஊழியர் க: விஜயராசாவின் அன்புத் தந்தையாரின் மரணத்தையொட்டி எமது ஸ்தாபனத்தின் உரிமையாளரும், ஊழியர்களும் தங்களது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறார்கள்:

சுகன்யா றேடர்ஸ்
[8461] பலாலி வீதி, திருநெல்வேலி



## மரண அறிவித்தல்

**பொன்னுத்துரை நாகரத்தினம்**

(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்)
(Member - University Council)

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னுத்துரை நாகரத்தினம் 02-06-1994 அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை பத்மினிப் பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், சுதர்சன் (U K), சுகந்தன் (சிங்கப்பூர்), சுகிர்தன் ஆகியோரின் அன்பு தந்தையும், இரத்தினமணி, காலஞ்சென்ற Dr. இராஜரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கணேசரத்தினம் (ஓவசியர்), Dr. சுப்பிரமணியம், சரஸ்வதி (இளைப்பாறிய- ஆசிரியை), கெங்காதரன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-06-94 இல் சுன்னாகத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
'கப்பல் வளவு' நா: சுகிர்தன் (மகன்)
சுன்னாகம். (8448)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது